Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 43

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

5 ஸஃபர் 1439 ஹிஜ்ரி கமரி 26 அஹா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

26 அக்டோபர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**என்னை காஃபிர் என்று கூறுகின்ற ஃபத்வாக்கள் (மார்க்கத் தீர்புகள்) வரவழைக்கப்பட்டன. நான் காஃபிராகி விட்டேன் என்று உலகில் ஒரு கூச்சல் எழுப்பப்பட்டது. என்னை கொலை செய்ய வேண்டும் என்று ஃபத்வாக்கள் கொடுக்கப்பட்டன. ஆட்சியில் இருப்பவர்கள் தூண்டி விடப்பட்டனர். பொதுமக்கள் என்னை விட்டும் எனது ஜமாஅத்தை விட்டும் விலக்கி வைக்கப்பட்டனர். சுருக்கமாக, எல்லா வகையிலும் என்னை அழிப்பதற்காக முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், இறைவனின் முன்னறிவிப்பிற்கேற்ப இந்த எல்லா மல்லவிகளும், அவர்களுக்குத் துணையாக நின்றவர்களும் தங்களது முயற்சிகளில் தோல்வி அடைந்தனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**எழுபத்தி ஏழாவது அடையாளம்:** எனது மகனான பஷீர் அஹ்மத் கண்களில் நோய் இருந்ததனால் எந்த அளவு நோய்வாய்ப்பட்டிருந்தார் என்றால் எந்த மருந்தும் அவருக்குப் பலன் தர முடியாமல் ஆகி விட்டது. பார்வையை இழக்கும் அபாயம் இருந்தது. நோயின் கடுமை அதன் உச்சத்தை அடைந்த சமயத்தில் நான் துஆ செய்தேன். அப்போது بَرَّق طفلی بشیر அதாவது, எனது மகன் பஷீர் பார்க்க ஆரம்பித்து விட்டார் என்று இல்ஹாம் வந்தது. அதே நாளிலோ அல்லது அடுத்த நாளோ அவர் குணமடைந்து விட்டார். இந்த சம்பவமும் கூட ஏறக்குறைய நூறு பேர்களுக்குத் தெரிந்திருக்கும்.

**எழுபத்தி எட்டாவது அடையாளம்:** எங்களது வீட்டையொட்டி ஒரு தெருவில் இருக்கின்ற சிறிய பள்ளிவாயிலை (முபாரக் பள்ளிவாயிலை) நான் கட்டியபோது, இதற்கு ஒரு வரலாறு இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்தது. அப்போது இறைவன் புறமிருந்து இவ்வாறு (உள்ளத்தில்) இடப்பட்டது. مُبَارِكٌ وَّمُبَارَكٌ وَكُلُّ اَمْرٍ مُّبَارَكٍ يُّجْعَلُ فِيْهِ (இது அருளுக்குரியதும் அருளை வழங்கக் கூடியதுமாகும். இதில் செய்யப்படுகின்ற ஒவ்வொரு விஷயமும் அருளுக்குரியது). இது ஒரு முன்னறிவிப்பாக இருந்தது. இதிலிருந்தே இப்பள்ளிவாயில் கட்டப்பட்டதற்கான வரலாற்றின் உருவும் தோற்றமும் வெளிப்படுகின்றது.

**எழுபத்தி ஒன்பதாவது அடையாளம்:** பராஹீனே அஹ்மதிய்யயாவில் இந்த ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக இந்த முன்னறிவிப்பு இடம் பெற்றிருக்கின்றது. كَزَرْعٍ اَخْرَجَ شَطْئَهٗ فَاٰزَرَهٗ فَاسْتَغْلَظَ فَاسْتَوٰى عَلٰى سُوْقِهٖ அதாவது, முதலில் அது விதையாக இருக்கும். அது தன் தளிரை வெளிப்படுத்தும். பின்னர் அது அடர்த்தியாகி விடும். பிறகு, அது தனது தண்டின் மீது உறுதியாக நிற்கும். இது ஒரு பெரிய முன்னறிவிப்பாகும். இந்த ஜமாஅத் உருவாகுவதற்கு முன்னதாகவே அதன் வளர்ச்சி தொடர்பாக, இன்றிலிருந்து இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட முன்னறிவிப்பாக இது இருக்கின்றது. அந்த சமயத்தில் ஜமாஅத்தும் இருக்கவில்லை. இன்னும் சொல்வதென்றால், அவர்களில் எவரும் எனது பெயரைக் கூட அறிந்திருக்க -வில்லை. இதற்குப் பிறகு மேலான இறைவனின் அருளும் கருணையும் இந்த ஜமாஅத்தை உருவாக்கி விட்டது. இப்போது மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்த ஜமாஅத்தில் உள்ளனர். நான் இறைவனின் கையால் விதைக்கப்பட்ட ஒரு சிறு விதையைப் போன்று இருந்தேன். பிறகு ஒரு காலம் வரை நான் மறைவாக இருந்து வந்தேன். பிறகு எனது தோற்றம் நிகழ்ந்தது. பல கிளைகளும் என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டன. எனவே, இந்த முன்னறிவிப்பு இறைவனின் கையாலேயே நிறைவேறியது.

**என்பதாவது அடையாளம்:** பராஹீனோ அஹ்மதிய்யாவில் இந்த முன்னறிவிப்பு இருக்கின்றது. يُرِيْدُوْنَ اَنْ يُّطْفِـُٔوْا نُوْرَ اللّٰهِ بِاَفْوَاهِهِمْ وَاللّٰهُ مُتِمُّ نُوْرِهٖ وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ அதாவது, எதிரிகள் தங்கள் வாய்களால் ஊதுவதன் மூலம் இறைவனின் ஒளியை அணைத்து விட நாடுவர். ஆனால், நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் இறைவன் தனது ஒளியை முழுமையாக்கியே தீருவான். இது எனக்கு எந்தவொரு எதிரியும் இல்லாத சமயத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பாகும். இன்னும் சொல்வதென்றால், யாருக்கும் எனது பெயர் கூட தெரியாமல் இருந்தது. இதற்குப் பிறகு முன்னறிவிப்பில் குறிப்பிடப் -பட்டிருந்ததற்கேற்ப உலகில் கண்ணியத்துடன் எனது புகழ் பரவியது. ஆயிரக்கணக்கானோர் என்னை ஏற்றுக் கொண்டனர். அப்போது எந்த அளவு எனக்கு எதிர்ப்பு இருந்தது என்றால் மக்கத்து வாசிகளிடம் நடந்ததற்கு மாற்றமான விஷயங்களை எடுத்துக் கூறி என்னை காஃபிர் என்று கூறுகின்ற ஃபத்வாக்கள் மக்காவிலிருந்து வரவழைக்கப்பட்டன. நான் காஃபிராகி விட்டேன் என்று உலகில் ஒரு கூச்சல் எழுப்பப்பட்டது. என்னை கொலை செய்ய வேண்டும் என்று ஃபத்வாக்கள் கொடுக்கப்பட்டன. ஆட்சியாளர்கள் தூண்டப்பட்டனர். பொதுமக்கள் என்னை விட்டும் எனது ஜமாஅத்தை விட்டும் விலக்கி வைக்கப்பட்டனர். சுருக்கமாக, எல்லா வகையிலும் என்னை அழிப்பதற்காக முயற்சி செய்யப்பட்டது. ஆனால், மேலான இறைவனின் முன்னறிவிப்பிற்கேற்ப இந்த எல்லா மல்லவிகளும், அவர்களுக்கு துணையாக நின்றவர்களும் தங்களது முயற்சிகளில் தோல்வியடைந்தனர். எதிரிகள் எந்த அளவு குருடர்களாக இருக்கின்றனர் என்பது வேதனைக்குரிய விஷயமாகும். அவர்கள் இந்த முன்னறிவிப்புகள் எந்தக் காலத்தில் செய்யப்பட்டன? எந்த அளவு மகிமையுடனும் வல்லமையுடனும் அது நிறைவேறி இருக்கின்றது என்பதை உணர்ந்து அந்த முன்னறிவிப்புகளிலுள்ள மகத்துவத்தைப் பார்க்கவில்லை. இறைவனை தவிர இது வேறு ஒருவரின் வேலையா என்ன? அவ்வாறிருந்தால், அவற்றிற்கு நிகரானதை எடுத்துக் காட்டுங்கள். இது மனிதனுடைய பணியாக இருந்திருந்தால், மேலும் இறைவனின் விருப்பத்திற்கு எதிரானதாக இருந்தால் அவர்கள் தங்கள் முயற்சிகளில் தோல்வி அடைந்திருக்க மாட்டார்கள் என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. யார்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

உலகில் பல்வேறு வகையான சபைகள் உள்ளன. அல்லது பல்வேறு சபைகளுக்கு பல்வேறு நோக்கங்கள் உள்ளன. சில சபைகள் ஆலோசனைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில் உலக நோக்கங்களைப் பெறுவதற்காக ஆலோசிக்கப்படுகின்றது. மக்களின் நன்மைக்காகவும் ஏதேனும் சபைகள் கூட்டப்பட்டாலும் சிந்திக்கப்பட்டாலும் அவைகளும் கூட உலக நோக்கங்களுக்காகவே கூட்டப்படுகின்றன. இறைவனுடைய திருப்தியைப் பெறுவது அதன் நோக்கமாக இருப்பதில்லை. ஆனால் மார்க்க நோக்கங்களுக்காக உள்ள சில சபைகளும் உள்ளன. அவை அல்லாஹ்வை நினைவு கூர்வதை நிலை நிறுத்துவதற்காகவும் உள்ளன. மனிதர்களை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்காக ஆலோசிக்கப்படுகின்ற சிந்திக்கப்படுகின்ற சபைகளும் உள்ளன. அல்லது ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதற்கான வழிகளைத் தேடுவதற்கான சபைகளும் உள்ளன. அல்லது அந்த சபைகளில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்கு அதில் கலந்து கொள்கின்றனர். சுருக்கமாக, இந்த சபைகளின் நோக்கம் நம்முடைய அனைத்து பணிகளும் நாம் தீட்டக்கூடிய அனைத்து திட்டங்களும் மஜ்லிஸின் அனைத்து நிகழ்ச்சிகளும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாக மட்டுமே உள்ளது. அந்த சபைகளில் வீணானவைகளிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்பதற்காக அவை உள்ளன. இப்படிப்பட்ட சபைகள்தான் இறைவனுக்கு மிகவும் பிடித்தமானவையாக இருக்கின்றது. அப்படிப்பட்ட சபைகளின் விளைவுகள் இம்மையிலும் வெளிப்படுகின்றன. அப்படிப்பட்ட சபைகளில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்கு அல்லாஹ் மரணித்த பிறகும் அருளுகின்றான்.

திருக்குர்ஆனிலும் கூட அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு சபைகள் தொடர்பாக வழிகாட்டியிருப்பது என்னவென்றால், தீங்கு, கிளர்ச்சி போன்றவைகளிலிருந்து தூய்மையானதாகவும், பாவங்களிலிருந்து தூய்மையானதாகவும், தூதருக்குக் கட்டுப்படாமையிலிருந்து விலகி இருக்கக் கூடியதாகவும், இறையச்சத்தின்படி நடக்கக் கூடியதாகவும் நம்பிக்கை கொண்டவர்களின் சபைகள் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இன்றைய நாட்களில் முஸ்லிம்களின் பெரும்பான்மையான சபைகள் இதற்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கின்றது.

முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு உலகை தங்களது நோக்கமாக ஆக்கிக் கொண்டு அதன் பின்னால் ஓடக்கூடியவர்கள் அறிவீனத்தில் இருக்கின்றார்கள். இந்நிலை இறை இருப்பின் மீது நம்பிக்கையே இல்லை என்பதற்கான செயல் வெளிப்பாடாகும். சிறிதளவேனும் இறை இருப்பின் மீது நம்பிக்கை இருந்திருந்தால் முஸ்லிம் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நிலைமை இன்று இருப்பதைப் போன்று இருந்திருக்காது. மேலும் பெயர் தாங்கி ஆலிம்களின் நிலையும் இன்று நமக்கு தென்படும் அளவிற்கு இருந்திருக்காது.

உலக ஆலோசனை சபைகளில் ஒரு சபை ஐக்கிய நாடுகளின் சபையும் ஆகும். கடந்த நாட்களில் அதன் ஒரு கூட்டம் நடந்தது. அதில் அமெரிக்க அதிபரின் சொற்பொழிவு நிகழ்ந்தது. அதைப் பற்றி இங்குள்ள மேற்கத்திய கட்டுரையாளர்களும், விமர்சகர்களும் எழுதியுள்ளனர். அதாவது, அந்த சொற்பொழிவின் மூலம் அமைதி நிலைபெறுவதற்குப் பதிலாக குழப்பம் உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருக்கின்றன என்று எழுதியுள்ளனர்.

நாம் நம்முடைய நிலைமைகளையும் பரிசீலித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஜமாஅத் முன்னேற்றம் பெறுவதை ஷய்த்தானால் ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஷய்த்தான் தனது இயல்பிற்கேற்ப நம்மிலும் நிம்மதியற்ற தன்மையை உருவாக்குவதற்கும், பிரிவினையை உருவாக்குவதற்கும் முயற்சி செய்து கொண்டிருப்பான். எனவே, சில வேளைகளில் ஒன்றாக சேர்ந்து அமரக் கூடியவர்கள் உள்ளூர் பகுதிகள் அல்லது நகரத்தின் ஜமாஅத் அமைப்பை பற்றியோ அல்லது தேசிய ஜமாஅத் அமைப்பைப் பற்றியோ பேசக் கூடியவர்கள் சில வேளைகளில் உண்மையிலேயே ஷய்த்தானின் வலையில் விழுந்து விடுகின்றனர். அனுதாபம் தெரிவித்தவாறு தாக்குதல் தொடுப்பது ஷய்த்தானின் பணியாகும். எனவே, அப்படிப்பட்ட சபைகளில் இத்தகையவர்களும் கலந்து கொள்கின்றனர். அவர்கள் உண்மையில் ஜமாஅத் அமைப்பிற்கு எதிராக இல்லாதவர்கள், ஜமாஅத்தின் வேதனையை உணர்ந்ததன் காரணமாக அதுபோன்ற நபர்களைக் குழப்பத்தை உருவாக்குபவர்கள் என்று மக்கள் கருதுவதில்லை. தங்களுடன் அனுதாபத்தோடு பேசுகின்றவர்கள் சரியாகத்தான் பேசுகின்றார்கள் என கருதுகின்றனர். மேலும், சீர்திருத்தத்திற்கான தேவை உள்ளது என்று நினைக்கின்றனர். ஆனால் சீர்திருத்தத்திற்கான தேவை இருக்கின்றது என்றால் நாட்டின் உயர் பொறுப்பாளிகள் வரை, மேலும் காலத்தின் கலீஃபா வரை அந்த விஷயத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அதற்குப் பிறகு இங்குமங்கும் சபைகளாக அமர்ந்து பேசுவது, மிகவும் இரகசியமான விஷயங்கள் பேசப்படுவது போன்றும், முக்கியமான விஷயங்கள் பேசப்படுவது போன்றும், ஜமாஅத் மீதான வேதனையில் பேசப்படுவது போன்றும் பேசுவது முற்றிலும் தவறான வழிமுறையாகும். இவை பாவம், தீங்கு, தூதருக்குக் கட்டுப்படாமை மற்றும் இறையச்சத்தை விட்டு விலகிச் செல்வது போன்றவைகளின் அடையாளங்களாகும்.

அஹ்மதிய்யத்தின் எதிரிகள் வெளிப்படையாக ஜமாஅத்திற்கு எதிரான திட்டங்களைத் தீட்டுகின்றனர்; தீட்டவும் செய்வர். அதே வேளையில் அவர்கள் அனுதாபம் என்ற பெயரில் சாதாரண மக்களையும் பலவீனமான ஈமான் கொண்டவர்களையும் தங்களது ஆயுதமாக ஆக்கிக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இது தொடர்பாக விழிப்போடு இருக்க வேண்டும். அல்லாஹ் ஜமாஅத்தை எல்லா வகையான உள் மற்றும் வெளிக் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பானாக. மேலும் எப்போதும் நன்மை மற்றும் இறையச்சத்தை உடைய சபைகளில் அமரக்கூடிய, அதன் அங்கமாக ஆகக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக.

சபையின் பல்வேறு வகைகள் மற்றும் நிலைமைகள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது உண்மை அடியாராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆகியோரின் மிகவும் முக்கியமான பொன்னான கட்டளைகளன் ஒளியில் ஹுஸூர் அவர்கள் ஜமாஅத் சகோதரர்களுக்கு அறிவுரைகளைக் கூறினார்கள்.

தாய், தந்தையர்களும் தமது குழந்தைகளுடைய சபைகள் மற்றும் அவர்களின் நட்பு வட்டாரங்களைக் கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் நமது இளைஞர்கள் தமது இளமைப் பருவத்தில் கால் வைத்தவுடன் தீய நட்பு மற்றும் தீய சகவாசத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். தாமும் வீடுகளில் எப்படிப்பட்ட தூய சபைகளைக் கூட்ட வேண்டும் என்றால் அவை எப்போதும் தர்பிய்யத் கோணத்தில் சிறந்ததாக இருக்க வேண்டும்.

இங்கு இன்று லஜ்னா இமாயில்லாஹ்வின் இஜ்திமா ஆரம்பமாகின்றது. லஜ்லாக்களும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுடைய நிகழ்ச்சிகளில் அதிகமாக மார்க்க மற்றும் அறிவுசார்ந்த அமர்வுகள் இருக்க வேண்டும். மேலும் கலந்து கொள்ளக்கூடிய பெண்களும் அவர்கள் ஒரு திருவிழாவில் கலந்து கொள்வதற்காக இங்கு வரவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

---

நிலையான மார்க்க மற்றும் அறிவுசார்ந்த சபைகளையே உருவாக்க வேண்டும். முறையாக நிகழ்ச்சிகள் நடக்காவிட்டாலும் கூட தங்களது சபைகளில் இதையும் அதையும் பேசுவதற்கு பதிலாக, வீணானவற்றைப் பேசுவதற்குப் பதிலாக நல்ல விஷயங்களைப் பேச வேண்டும். மேலும் வீணானவற்றிலிருந்து எப்போதும் தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் தனது நேரம் வீணாவதையும் பாதுகாக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் மார்க்கமற்ற மக்களோடு அதிகமாக அமர்தலோ மற்றும் உணவு உண்பதோ உங்களை மார்க்கத்தை விட்டு தூரம் விலக்கி விடும். எனினும், நிச்சயமாக தப்லீகிற்காகவோ அல்லது நல்ல விஷயங்களைக் கூறுவதற்காகவோ கண்டிப்பாக தொடர்பிருக்க வேண்டியதுதான். அது அல்லாமல் தப்லீக் நடைபெற முடியாது. ஆனால் அதற்கு அவர்களை நமது சபைகளுக்கு அழைத்து வர வேண்டும். ஏனென்றால் இந்த நன்மையான சபைகள் தமது தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன. நமது மாநாடுகளில் நிகழ்ச்சிகளில் பங்கு பெறக்கூடிய ஏராளமானோர் இதை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். அதாவது இங்கு வந்த பிறகு எங்களுடைய நிலைமை முற்றிலும் மாறி விட்டது என்கின்றனர்.

அமெரிக்காவிலுள்ள ஃபிலடெல்ஃபியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய பிலால் அப்துஸ்ஸலாம் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

# சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**22 செப்டம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **22 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

உலகில் பல்வேறு வகையான சபைகள் உள்ளன. அல்லது பல்வேறு சபைகளுக்கு பல்வேறு நோக்கங்கள் உள்ளன. சில சபைகள் ஆலோசனைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில் உலக நோக்கங்களைப் பெறுவதற்காக ஆலோசிக்கப்படுகின்றது. ஆட்சியை நடத்துவதற்காக ஆலோசிக்கப்பட்டாலும் சரியே, அல்லது அரசியல்வாதிகளின் சபைகளில் ஆலோசிக்கப்பட்டாலும் சரியே, அல்லது வியாபாரம் செய்பவர்களது சபைகளாக இருந்தாலும் சரி, அல்லது விளையாட்டு மற்றும் கேளிக்கைகள் பற்றிய விஷயங்களைப் பேசுவதற்கான சபைகளாக இருந்தாலும் சரி, பிறகு சில பெயர் தாங்கி அறிவு சார்ந்த சபைகளும் உள்ளன. இவைகளுக்காக கமிட்டிகள் உருவாக்கப்படு–கின்றன. கேளிக்கைகளின் நிகழ்ச்சிகளை வகுப்பதற்கும் ஒன்றாக அமர்ந்து ஆலோசிக்கின்றனர்.

சுருக்கமாக, இந்த அனைத்து வகையான சபைகளும், குழுக்களும் ஒன்றிணைந்து அமர்வது உலகப் பணிகளுக்காக செய்யப்படுகின்றது. இறைவனுக்காக அல்லது இறை திருப்தியைப் பெறுவதற்காக அல்லது இறைவனுடைய நெருக்கத்தைப் பெறுவதற்காக இந்த சபைகள் இல்லை. மக்களின் நன்மைக்காகவும் ஏதேனும் சபைகள் கூட்டப்பட்டாலும் சிந்திக்கப்பட்டாலும் அவைகளும் கூட உலக நோக்கங்களுக்காகவே கூட்டப்படுகின்றன. இறைவனுடைய திருப்தியைப் பெறுவது அதன் நோக்கமாக இருப்பதில்லை. ஆனால் மார்க்க நோக்கங்களுக்காக உள்ள சில சபைகளும் உள்ளன. அவை அல்லாஹ்வை நினைவு கூர்வதை நிலை நிறுத்துவதற்காகவும் உள்ளன. மனிதர்களை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்காக ஆலோசிக்கப்படுகின்ற சிந்திக்கப்படுகின்ற சபைகளும் உள்ளன. அல்லது ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதற்கான வழிகளைத் தேடுவதற்கான சபைகளும் உள்ளன. அல்லது அந்த சபைகளில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்கு அதில் கலந்து கொள்கின்றனர்.

சுருக்கமாக, இந்த சபைகளின் நோக்கம் நம்முடைய அனைத்து பணிகளும் நாம் தீட்டக்கூடிய அனைத்து திட்டங்களும் மஜ்லிஸின் அனைத்து நிகழ்ச்சிகளும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாக மட்டுமே உள்ளது. அந்த சபைகளில் வீணானவைகளிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்பதற்காக அவை உள்ளன. இப்படிப்பட்ட சபைகள்தான் இறைவனுக்கு மிகவும் பிடித்தமானவையாக இருக்கின்றது. அப்படிப்பட்ட சபைகளின் விளைவுகள் இம்மையிலும் வெளிப்படு–கின்றன. அப்படிப்பட்ட சபைகளில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்கு அல்லாஹ் மரணித்த பிறகும் அருளுகின்றான்.

ஆக, நம்பிக்கையாளரின் பணி என்னவென்றால், அவருடைய வீட்டின் சபையாக இருந்தாலும் சரி, மனைவி மக்களோடு உள்ள சபைகளாக இருந்தலும் சரி, அல்லது வீட்டிற்கு வெளியிலுள்ள சபைகளாக இருந்தாலும் சரி, அவற்றில் நாம் அல்லாஹ்வுடைய திருப்தியை எவ்வாறு பெற வேண்டும் என்ற முயற்சி இருக்க வேண்டும். மேலும், தமது ஆன்மீகத்தை எவ்வாறு சரி செய்ய வேண்டும். மேலும் ஆன்மீகத்தில் எவ்வாறு முன்னேற வேண்டும் என்று முயற்சி செய்ய வேண்டும். தமது மற்றும் நம்பிக்கையாளர்களின் நிலைமைகளை எவ்வாறு சரி செய்ய வேண்டும் என்பதற்காக அது இருக்க வேண்டும். ஒரு நம்பிக்கையாளரின் உலக சபைகளும் கூட வெளிப்படையாக அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்து விலகி இருப்பதில்லை. உலகப் பணிகளைச் செய்யும்போது கூட அவர் வீணானவைகளிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடியவராக இருக்கின்றார். உலகப் பணிகளில் மூழ்கியிருந்தாலும் உள்ளம் இறை நினைப்பை மறப்பதில்லை. உலகப் பணிகளின் சபைகளிலும் கூட ஏமாற்றுதல் மற்றும் பிறரின் உரிமைகளைப் பறித்தல் போன்றவைகள் பேசப்படுவதில்லை. அவர் உலக வேலைகளைச் செய்து கொண்டிருந்–தாலும் சரியே.

இன்றைய நாட்களின் அரசியல் மற்றும் உலகவாதிகளின் சபைகளில் செய்யப்படுவதைப் போன்று அங்கு நடப்பதில்லை. மாறாக, அல்லாஹ் உடைய அச்சம் மற்றும் தக்வா எப்போதும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. இதுவே ஒரு நம்பிக்கையாளரிடமிருந்து எதிர்பார்க்கவும் செய்கின்றது. அதாவது இந்த விஷயங்களை அவர் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. திருக்குர்ஆனிலும் கூட அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு சபைகள் தொடர்பாக வழிகாட்டியிருப்பது என்னவென்றால், தீங்கு, கிளர்ச்சி போன்றவைகளிலிருந்து தூய்மையானதாகவும், பாவங்களிலிருந்து தூய்மையானதாகவும், தூதருக்குக் கட்டுப்–படாமையிலிருந்து விலகி இருக்கக் கூடியதாகவும், இறையச்சத்தின்படி நடக்கக் கூடியதாகவும் நம்பிக்கை கொண்டவர்களின் சபைகள் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இன்றைய நாட்களில் முஸ்லிம்களின் பெரும்பான்மை–யான சபைகள் இதற்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கின்றது. முஸ்லிம்கள் முஸ்லிம்களை அழிப்பதற்கு திட்டங்களைத் தீட்டுகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا تَنَاجَيْتُمْ فَلَا تَتَنَاجَوْا بِالْاِثْمِ وَالْعُدْوَانِ وَمَعْصِيَتِ الرَّسُوْلِ

وَتَنَاجَوْا بِالْبِرِّ وَالتَّقْوٰى وَاتَّقُوا اللهَ الَّذِيْۤ اِلَيْهِ تُحْشَرُوْنَ

அதாவது, நம்பிக்கை கொண்டவர்களே! பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் இரகசிய ஆலோசனை செய்யும்போது பாவம், தீங்கு மற்றும் தூதருக்குக் கட்டுப்படாமை போன்றவற்றை ஆலோசிக்காதீர்கள். நன்மை மற்றும் இறையச்சம் தொடர்பாக ஆலோசனை செய்யுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனிடமே நீங்கள் ஒன்று சேர்க்கப்படுவீர்கள். (58:10)

ஆனால், நான் கூறியதுபோன்று முஸ்லிம்கள் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையை மறந்து விட்டனர். தங்களுக்கிடையே உள்ள பிரிவினை எல்லை தாண்டி உள்ளது. அல்லாஹ் நம்பிக்கை–யாளர்களின் அடையாளமாக رُحَمَآءُ بَيْنَهُمْ அதாவது அவர்கள் தங்களுக்கிடையே அன்பு மற்றும் நேசத்தோடு இருப்பார்கள் (48:30) என்று கூறுகின்றான். ஆனால், இங்கோ நிராகரிப்பவர்–களைப் பற்றி அல்லாஹ் படம் பிடித்துக் காட்டி இருக்கக்கூடிய காட்சியே தென்படுகின்றது. قُلُوْبُهُمْ شَتّٰى அதாவது, அவர்களின் உள்ளங்கள் பிளவுபட்டுள்ளன (59:15) என்கின்ற காட்சி தென்படுகிறது. நம்மவர்களோடும் அந்நியர்–களோடும் செய்யப்படுகின்ற ஆலோசனைகள் மற்றும் இரகசிய உடன்படிக்கைகள் இருக்கின்ற–தென்றால் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்குக் கட்டுப்படாதவாறு அவை இருக்கின்றது. இறையச்சத்தை விட்டு விலகியதாக அவை இருக்கின்றன. அல்லாஹ்வின் அச்சம் முற்றிலும் இல்லாமல் போய் விட்டது.

அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனிடமே நீங்கள் ஒன்று சேர்க்கப்படுவீர்கள். அங்கு ஆட்சிகளும், அரசர்களும், செல்வங்களும் மற்றும் மேற்கத்திய ஆற்றல்களும் பலனளிக்காது. எந்த வல்லரசும் அங்கு அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்குக் கட்டுப்படாமையிலிருந்த மற்றும் இறையச்சத்தை விட்டு விலகி இருந்ததற்கான தண்டனையில் இருந்து ஒருவரைக் காப்பாற்ற முடியாது. முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு உலகை தங்களது நோக்கமாக ஆக்கிக் கொண்டு அதன் பின்னால் ஓடக்கூடியவர்கள் அறிவீனத்தில் இருக்கின்றார்கள். இந்நிலை இறை இருப்பின் மீது நம்பிக்கையே இல்லை என்பதற்கான செயல் வெளிப்பாடாகும். சிறிதளவேனும் இறை இருப்பின் மீது நம்பிக்கை இருந்திருந்தால் முஸ்லிம் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நிலைமை இன்று இருப்பதைப் போன்று இருந்திருக்காது. மேலும் பெயர் தாங்கி ஆலிம்களின் நிலையும் இன்று நமக்கு தென்படும் அளவிற்கு இருந்திருக்காது.

எவ்வாறிருப்பினும், இக்காலத்தில் இப்படிப்பட்ட எல்லா வகையான சிந்தனைகளிலிருந்து நம்மை தூய்மைப்படுத்துவதோடு மட்டுமின்றி அல்லாஹ் உடைய அச்சம் மற்றும் தக்வாவை நம்மிடம் அதிகரிக்கச் செய்வது நமது கடமையாகும். அதே வேளையில் இம்மக்கள் வரை எவர்களுடைய தொடர்புகள் இருக்கின்றதோ அதாவது அஹ்மதி அல்லாத முஸ்லிம்களோடு எவர்களுக்கெல்லாம் தொடர்புகள் இருக்கின்றதோ அவர்கள் தமது

மட்டத்தில் தத்தமது வட்டத்தில் முஸ்லிம்களுக்குப் புரிய வைக்க தங்களால் முடிந்த அளவு முயற்சி செய்ய வேண்டும். அதாவது உங்களுடைய இந்த நிலைமை உங்களை அந்நியர்களின் முழுமையான அடிமைகளாக மாற்றி விடுவதோடு மட்டுமல்லாமல் இறை தண்டனைக்கும் ஆளாக்கி விடும் என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். எந்த உலகின் பின்னால் நீங்கள் கிடக்கின்றீர்களோ அதுவும் உங்களிடமிருந்து கை நழுவிப் போய் விடும். மார்க்கத்தை நீங்கள் ஏற்கெனவே விட்டு விட்டீர்கள். எனவே, அல்லாஹ்வின் அச்சம் மற்றும் தக்காவை உள்ளத்தில் ஏற்படுத்துவதற்கான நேரம் இதுவாகும். இல்லையென்றால் எல்லாம் கை நழுவிப் போய்க் கொண்டே இருக்கும் என்று அவர்களிடம் கூற வேண்டும்.

உலக ஆலோசனை சபைகளில் ஒரு சபை ஐக்கிய நாடுகளின் சபையும் ஆகும். கடந்த நாட்களில் அதன் ஒரு கூட்டம் நடந்தது. அதில் அமெரிக்க அதிபரின் சொற்பொழிவு நிகழ்ந்தது. அதைப் பற்றி இங்குள்ள மேற்கத்திய கட்டுரையாளர்களும், விமர்சகர்களும் எழுதியுள்ளனர். அதாவது, அந்த சொற்பொழிவின் மூலம் அமைதி நிலைபெறுவதற்குப் பதிலாக குழப்பம் உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருக்கின்றன என்று எழுதியுள்ளனர். இன்னும் சொல்வதென்றால், இந்த சொற்பொழிவினால் சவூதி அரேபியா மற்றும் சில முஸ்லிம் நாடுகள் மகிழ்ச்சி அடைந்திருக்கலாம். ஆனால், மிகவும் வருத்தத்திற்குரிய போரின் நெருப்பை மூட்டக் கூடிய சொற்பொழிவாக அது இருந்தது என்றும் அவர்கள் வெளிப்படையாகவே எழுதியுள்ளனர்.

எனவே முஸ்லிம் அரசாங்கங்கள் அல்லாஹ்வின் கட்டளையை முன் வைக்க வேண்டும். எல்லா வகையான குழப்பங்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் இது பொதுவாக முஸ்லிம் உலகில் நடந்து கொண்டிருக்கின்ற விஷயங்களை நான் எடுத்து வைத்துள்ளேன். ஆனால், நாம் நம்முடைய நிலைமைகளையும் பரிசீலித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஜமாஅத் முன்னேற்றம் பெறுவதை ஷய்த்தானால் ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஷய்த்தான் தனது இயல்பிற்கேற்ப நம்மிலும் நிம்மதியற்ற தன்மையை உருவாக்குவதற்கும், பிரிவினையை உருவாக்குவதற்கும் முயற்சி செய்து கொண்டிருப்பான். எனவே, சில வேளைகளில் ஒன்றாக சேர்ந்து அமரக் கூடியவர்கள் உள்ளூர் பகுதிகள் அல்லது நகரத்தின் ஜமாஅத் அமைப்பை பற்றியோ அல்லது தேசிய ஜமாஅத் அமைப்பைப் பற்றியோ பேசக் கூடியவர்கள் சில வேளைகளில் உண்மையிலேயே ஷய்த்தானின் வலையில் விழுந்து விடுகின்றனர். அனுதாபம் தெரிவித்தவாறு தாக்குதல் தொடுப்பது ஷய்த்தானின் பணியாகும்.

எனவே, அப்படிப்பட்ட சபைகளில் இத்தகையவர்களும் கலந்து கொள்கின்றனர். அவர்கள் உண்மையில் ஜமாஅத் அமைப்பிற்கு எதிராக இல்லாதவர்கள், ஜமாஅத்தின் வேதனையை உணர்ந்ததன் காரணமாக அதுபோன்ற நபர்களைக் குழப்பத்தை உருவாக்குபவர்கள் என்று மக்கள் கருதுவதில்லை. தங்களுடன் அனுதாபத்தோடு பேசுகின்றவர்கள் சரியாகத்தான் பேசுகின்றார்கள் என கருதுகின்றனர். மேலும், சீர்திருத்தத்திற்கான தேவை உள்ளது என்று நினைக்கின்றனர். ஆனால் சீர்திருத்தத்திற்கான தேவை இருக்கின்றது என்றால் நாட்டின் உயர் பொறுப்பாளிகள் வரை, மேலும் காலத்தின் கலீஃபா வரை அந்த விஷயத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அதற்குப் பிறகு இங்குமங்கும் சபைகளாக அமர்ந்து பேசுவது, மிகவும் இரகசியமான விஷயங்கள் பேசப்படுவது போன்றும், முக்கியமான விஷயங்கள் பேசப்படுவது போன்றும், ஜமாஅத் மீதான வேதனையில் பேசப்படுவது போன்றும் பேசுவது முற்றிலும் தவறான வழிமுறை ஈகும். இவை பாவம், தீங்கு, தூதருக்குக் கட்டுப்படாமை மற்றும் இறையச்சத்தை விட்டு விலகிச் செல்வது போன்றவைகளின் அடையாளங்களாகும். எனவே, அப்படிப்பட்ட சபைகளிலிருந்து அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு நீங்கள் அதிலிருந்து விலகுங்கள் என்று எச்சரித்துள்ளான். ஏதேனும் பொறுப்பாளர்கள் தொடர்பாக முறையீடு இருக்கும் என்றாலோ அல்லது அமீருக்கு எதிராக முறையீடு இருக்கும் என்றாலோ மேலிடத்தில் புகார் செய்யுங்கள். அல்லது காலத்தின் கலீஃபா வரை விஷயத்தைக் கொண்டு செல்லுங்கள். அதோடு ஜமாஅத் மக்களின் வேலை முடிந்து விடுகின்றது. எந்த விவகாரத்தை எவ்வாறு பார்ப்பது மற்றும் அதை எவ்வாறு சரி செய்வது என்பது காலத்தின் கலீஃபாவின் வேலையாகும். நிச்சயமாக ஒவ்வொருவரும் துஆ செய்ய வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியும் வேதனையுடன் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் எல்லா வகையான தீமைகளையும் ஜமாஅத்திலிருந்து அகற்றுவானாக. மேலும் இறையச்சத்தின்படி நடக்கக்கூடிய, பணி செய்யக்கூடிய மக்கள் எப்போதும் ஜமாஅத்திற்கு கிடைத்துக் கொண்டே இருப்பார்களாக.

எனவே, இந்த முக்கியமான விஷயத்தை ஒவ்வொருவரும் நினைவில் வைக்க வேண்டும். அல்லாஹ் ஜமாஅத்திற்கு முன்னேற்றத்தை வழங்க வழங்க, மேலும் அல்லாஹ் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டும் இருக்கின்றான். ஷய்த்தானும் தனது பணியைச் செய்வான். ஷய்த்தான் முதல் நாளிலிருந்தே அல்லாஹ்விடம் இந்த விஷயத்தைக் கூறி அவன் நம்பிக்கையாளர்களை வழி தவறச் செய்வதற்காக அனுமதியும் பெற்றிருக்கின்றான். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் வெளிப்படையாக ஜமாஅத்திற்கு எதிரான திட்டங்களைத் தீட்டுகின்றனர்; தீட்டவும் செய்வர். அதே வேளையில் அவர்கள் அனுதாபம் என்ற பெயரில் சாதாரண மக்களையும் பலவீனமான ஈமான் கொண்டவர்களையும் தங்களது ஆயுதமாக ஆக்கிக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இது தொடர்பாக விழிப்போடு இருக்க வேண்டும். அல்லாஹ் ஜமாஅத்தை எல்லா வகையான உள் மற்றும் வெளிக் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பானாக. மேலும் எப்போதும் நன்மை மற்றும் இறையச்சத்தை உடைய சபைகளில் அமரக்கூடிய, அதன் அங்கமாக ஆகக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக. பாவம், தீமை, தூதருக்குக் கட்டுப்படாமை மற்றும் இறையச்சத்தை விட்டு தூரம் விலக்கிச் செல்லக்கூடிய சபைகளில் அமர்வதிலிருந்து பாதுகாப்பானாக.

சபைகளின் பல்வேறு வகைகள் மற்றும் நிலைகள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சில கூற்றுக்கள் உள்ளன. மேலும், அன்னாரது உண்மைப் பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில கூற்றுக்கள் உள்ளன. அவைகளை இப்போது நான் எடுத்து வைக்கின்றேன்.

ஒரு நம்பிக்கையாளரின் சபை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் மேலும் அந்த தரத்தை உடைய சபையாக அது இல்லாத பட்சத்தில் ஒரு நம்பிக்கயாளரின் எதிர் நடவடிக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நம்முடைய கொள்கை இதுவேயாகும். அல்லது ஒரு நம்பிக்கையாளருடைய செயல் எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், அவர் பேசினால் நல்லதைப் பேச வேண்டும். இல்லையென்றால் அமைதியாக இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு சபையில் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் எள்ளி நகையாடப்பட்டால் அங்கிருந்து சென்று விட வேண்டும். ஏனென்றால் அவர்களைச் சார்ந்தவர்களாக நீங்களும் கருதப்படக் கூடாது அல்லது முழுமையான முறையில் வெளிப்படையாக பதில் கூற வேண்டும். இந்த இரண்டு விஷயங்கள் மட்டுமே உள்ளது. ஒரு உண்மையான மூஃமின் என்றால் அவருக்கு இந்த

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

இரண்டு வழியைத்தவிர வேறு வழி இல்லை. அதாவது முழுமையான முறையில் பேச வேண்டும். அல்லது அமைதியாக இருக்க வேண்டும். அல்லது எழுந்து சென்று விட வேண்டும். மூன்றாவது வழிமுறை நயவஞ்சகம் ஆகும். அதாவது அந்த சபையில் அமர்ந்து கொண்டு அவர்களோடு ஆமாம் போடுவது, தாழ்ந்த குரலில் மெதுவாக தன்னுடைய கொள்கையை எடுத்துக் கூறுவது போன்றவை நயவஞ்சகமாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 130; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அதாவது சபையில் அமர்ந்து கொண்டு அஞ்சியவாறு மக்களின் போச்சுக்களுக்கு ஆமாம் போட்டுக் கொண்டு மெல்லிய குரலில் நீங்கள் தவறாக கூறுகின்றீர்கள். இது அவ்வாறு அல்ல. இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று கூறுவது. ஆனால் வெளிப்படையாக விஷயத்தை கூறாமல் இருப்பது போன்றவை நயவஞ்சகம் ஆகும் என்று கூறினார்கள்.

இது நம்பிக்கையாளரின் வழிமுறை அல்ல. எனவே மார்க்கம் எள்ளி நகையாடப்படக்கூடிய சபைகள் அல்லது மார்க்கத்திற்கு எதிராக திட்டம் தீட்டப்படுகிற அல்லது உள்ளத்தில் குழப்பத்தை போடக்கூடிய சூழ்ச்சியோடு பேசடப்படக்கூடிய சபைகளில் இதுவே ஒரு நம்பிக்கையாளரின் எதிர்நடவடிக்கையாக இருக்க வேண்டும். அதாவது அல்லாஹ் மற்றும் அவனது தூதர் அல்லது அவரால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்திற்கும் அமைப்பிற்கும் எதிராக ஏதேனும் விஷயம் பேசப்பட்டால் கடுமையாக அதை மறுக்க வேண்டும். மேலும் அதுபோன்று பேசக்கூடியவர் -களிடம் உங்களுடைய பார்வையில் இந்த விஷயங்கள் சரியானதாக இருக்கின்றதென்றால் காலத்தின் கலீஃபாவிடம் இதை கொண்டு செல்லுங்கள் என்று கூற வேண்டும். ஆனால் இது போன்று பேசுவது ஆகுமானது கிடையாது என கூற வேண்டும். அது போன்ற சபைகளில் மனிதன் அமர்ந்திருந்தால் மேலும் தாழ்ந்த குரலில் அதை மறுத்திருந்தால், வெளிப்படையாக பேசாமல் இருந்திருந்தால் பிறகு அது நயவஞ்சகம் ஆகி விடுகின்றது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதிலிருந்து ஒரு நம்பிக்கையாளர் தவிர்ந்திருக்க வேண்டும். மார்க்க விவகாரங்களில் மற்றும் அமைப்பு ரீதியான விவகாரங்களில் ஒருபோதும் தன்மானமற்ற நிலைமையை வெளிப்படுத்தக் கூடாது. தன்மானம் இரு வகைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. ஒன்று வெளிப்படையாக பதில் கூற வேண்டும். அல்லது அந்த சபையை விட்டு எழுந்து சென்று விட வேண்டும். அல்லாஹ்வும் இந்த வழிமுறையையே கூறி இருக்கின்றான். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஒரு சஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலுல்லாஹ்! எனக்கு ஏதேனும் அறிவுரை கூறுங்கள் என்றார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் தக்வாவை மேற்கொள்ளுகள். மேலும், நீங்கள் ஏதேனும் சமுதாயத்தின் சபைகளுக்குச் சென்றால் அவர்களை உங்களுடைய இயல்பிற்கேற்ப பேசக் கண்டால் அங்கு நில்லுங்கள். அதாவது நன்மையான விஷயங்களைப் பேசுகிறார்கள் என்றால் தீய விஷயங்களைப் பேசவில்லை என்றால் குழப்பமான விஷயங்களைப் பேசவில்லை என்றால் பிறகு அங்கு நில்லுங்கள். ஆனால் நீங்கள் வெறுக்கின்ற விஷயங்கள் பேசப்படுகிறது என்றால் அந்த சபையிலிருந்து சென்று விடுங்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 368 ஹதீஸ் 18927. பைரூத்திலுள்ள ஆலமுல் குதுப் அச்சகத்தில் 1998 -ல் அச்சடிக்கப்பட்டது)

ஒரு நம்பிக்கையாளருக்கு எப்படிப்பட்ட சபைகள் விருப்பத்திற்குரியதாக இருக்க வேண்டும் என்றும் அன்னார் விளக்கியுள்ளார்கள். அதாவது, தனக்கு தனிப்பட்ட முறையில் விருப்பமில்லாத விஷயங்களைப் பேசக்கூடிய சபைகளிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்பது கிடையாது. மாறாக, ஜமாஅத்திற்கும் ஜமாஅத் அமைப்பிற்கும் எதிராக பேசக்கூடிய சபைகளை விட்டு விடுங்கள் என்று அன்னார் கூறியுள்ளார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து நாங்கள் எப்படிப்பட்ட மக்களின் சபைகளில் அமர வேண்டும்? என வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், எவர்களைக் கண்டால் உங்களுக்கு இறைவன் நினைவுக்கு வருவானோ அப்படிப்பட்டவர்களது சபைகளில் அமருங்கள். மேலும், எவர்கள் பேசினால் உங்களது மார்க்க அறிவு அதிகமாகுமோ, எவர்களின் செயல்கள் உங்களுக்கு மறுமையை நினைவூட்டுமோ அப்படிப்பட்டவர்களின் சபைகளில் அமருங்கள் என்று கூறினார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 9 பக்கம் 77 ஹதீஸ் 25582. கிதாபுஸ் ஸுஹ்பதி கிஸ்முல் அஃப்ஆல். பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் 2004 -ல் அச்சடிக்கப்பட்டது)

ஆக, இதுவே ஒரு நம்பிக்கையாளர் தனது சபையைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் வைக்க வேண்டிய வழிமுறைகளாகும். அதாவது இறைவனை நினைவு கூறக்கூடிய சபைகளாக அவை இருக்க வேண்டும். அல்லாஹ்வின் மார்க்கத்தின் மகத்துவம் எடுத்துரைக்கப் -படுகின்ற சபைகளாக அது இருக்க வேண்டும். மேலும் மார்க்க அறிவும் அதிகமாகக் கூடிய வகையில் அந்த சபைகள் இருக்க வேண்டும். மேலும் இன்றைய காலத்தில் மார்க்க அறிவை அதிகப்படுத்துவது ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும். தப்லீகிற்கும், தஃவத்தே இலல்லாஹ்விற்கும், தர்பிய்யத்திற்கும் இவை மிக முக்கியமானவையாகும். இவை மறுமையையும் நினைவூட்டுகின்றன. மனிதனுக்கு உலகப் பொலிவுகள் ஒன்றுமே இல்லை என்பதன் பக்கம் இது கவனமூட்டுகின்றது. உலகத்தின் செல்வங்கள் மற்றும் வசதி வாய்ப்புகள் மட்டுமே எல்லாம் ஆகும் என்பது கிடையாது என்பதன் பக்கம் இவை கவனமூட்டுகின்றது. மாறாக, ஒரு நம்பிக்கையாளருக்கு இறை திருப்தியே முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும்.

முதல் ஹதீஸின் விளக்கம் கூறப்பட்டிருக் -கின்றது. அதாவது, உலகவாதிகளின் சபைகள் என்றால் அவைகள் ஒரு நம்பிக்கையாளருக்கு விருப்பத்திற்குரியதாக இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட சபைகளிலிருந்து உடனடியாக எழுந்து வந்து விட வேண்டும். இதன் பக்கம் நமது கவனம் இருக்குமென்றால் நமது பெரியவர்களும், பெரும்பாலான இளைஞர்களும், அதிகமான குழப்பங்களிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். இளைஞர்களின் பல்வேறு வகையான சபைகள் இருக்கின்றது. குறிப்பாக இளைஞர்கள் அதுபோன்ற சபைகளில் கலந்து கொள்கின்றனர். அவைகள் Fun என்ற பெயரில் நடைபெறுகின்றன. இளைஞர்களின் கூத்துகள் மற்றும் கொண்டாட்டங்களுக்காக அவை நடக்கின்றன. மேலும் இந்த மேற்கத்திய சூழலின் தாக்கத்தின் காரணத்தினால் நமது சில இளைஞர்களும் இதுபோன்ற சபைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்கின்றனர். ஒரு நம்பிக்கையாளரான இளைஞர் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவர் தமது வாழ்க்கையை இதுபோன்ற சபைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் சில வரம்புகளுக்குள் அவர் இருக்க வேண்டும். ஜமாஅத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்து விடுகின்றன. அதாவது தீய நட்பு மற்றும் தீய சகவாசத்தின் காரணமாக நமது இளைஞர்கள் இளமைப் பருவத்தில் கால் வைத்த உடனேயே பிறருக்கு இழப்பை ஏற்படுத்துகின்ற சில செயல்களைச் செய்து விடுகின்றனர். அக்கம் பக்கத்தினருக்கு இழப்பை ஏற்படுத்தி விடுகின்றனர். அல்லது பாதசாரிகளுக்கு இழப்பை ஏற்படுத்தி விடுகின்றனர். அல்லது எங்கேனும் சென்றிருந்தால் தீங்கிழைத்தவாறு இழப்பை ஏற்படுத்தி விடுகின்றனர்.

பிறகு இவர் ஜமாஅத்தைச் சார்ந்தவர் என்று தெரிய வரும்போது அப்படிப்பட்டவர்கள் ஜமாஅத்தின் அவப்பெயருக்கும் காரணமாக

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS
All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

அமைகின்றனர். எனவே தாய், தந்தையர்களும் தமது குழந்தைகளுடைய சபைகள் மற்றும் அவர்களின் நட்பு வட்டாரங்களைக் கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் நமது இளைஞர்கள் தமது இளமைப் பருவத்தில் கால் வைத்தவுடன் தீய நட்பு மற்றும் தீய சகவாசத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். தாமும் வீடுகளில் எப்படிப்பட்ட தூய சபைகளைக் கூட்ட வேண்டும் என்றால் அவை எப்போதும் தர்பிய்யத் கோணத்தில் சிறந்ததாக இருக்க வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: "ஒரு சமுதாயம் பள்ளிவாயிலில் இறை வேதத்தை ஓதினாலோ மேலும் தர்ஸ்களுக்காக அமர்ந்திருந்தாலோ அல்லாஹ் அவர்களின் மீது நிம்மதியை இறக்குகின்றான். மேலும் அல்லாஹ்வுடைய அருள் அவர்களைச் சூழ்ந்து கொள்கின்றது. மேலும் மலக்குமார்கள் தங்களுடைய அரவணைப்பில் அவர்கள் எடுத்துக் கொள்கின்றனர்." (சஹீஹ் முஸ்லிம் கிதாபத் திக்ரி வத்துஆயி... பாபு ஃபஸ்லுல் இஜ்திமாஹி அலா திலாவத்தில் குல்ஆனி வஅலத் திக்ரி ஹதீஸ் 6853)

அல்லாஹ்வுடைய மாபெரும் அருள் என்னவென்றால், ஜமாஅத்திற்கு அதுபோன்ற சந்தர்ப்பங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. உலகில் எல்லா இடங்களிலும் ஜமாஅத்துகள் மாநாடுகளை நடத்துகின்றன. இஜ்திமாக்கள் நடத்தப்படுகின்றது. அவைகள் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளாக இருக்கின்றதென்றால் தர்பிய்யத் கிடைக்கின்றது. அறிவை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. அல்லாஹ்வை நினைவு கூறத்தக்கதாகவும் அவை இருக்கின்றது.

உதாரணமாக, இங்கு இன்று லஜ்னா இமாயில்லாஹ்வின் இஜ்திமா ஆரம்பமாகின்றது. லஜ்லாக்களும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுடைய நிகழ்ச்சிகளில் அதிகமாக மார்க்க மற்றும் அறிவுசார்ந்த அமர்வுகள் இருக்க வேண்டும். மேலும் கலந்து கொள்ளக்கூடிய பெண்களும் அவர்கள் ஒரு திருவிழாவில் கலந்து கொள்வதற்காக இங்கு வரவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தாங்கள் இஜ்திமாவில் வந்ததன் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் நிலையான மார்க்க மற்றும் அறிவுசார்ந்த சபைகளையே உருவாக்க வேண்டும். முறையாக நிகழ்ச்சிகள் நடக்கா விட்டாலும் கூட தங்களது சபைகளில் இதையும் அதையும் பேசுவதற்கு பதிலாக, வீணானவற்றைப் பேசுவதற்குப் பதிலாக நல்ல விஷயங்களைப் பேச வேண்டும். மேலும் வீணானவற்றிலிருந்து எப்போதும் தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் தனது நேரம் வீணாவதையும் பாதுகாக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: எந்த மக்கள் சபையில் அமர்ந்து கொண்டு இறைவனை நினைவு கூர்வதில்லையோ அவர்கள் தங்களது அந்த சபையை கியாமத் நாளன்று ஏக்கத்துடன் பார்ப்பார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 724 ஹதீஸ் 7093. முஸ்னது அப்துல்லாஹ் பின் உமர் பின் ஆஸ். பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் அச்சடிக்கப்பட்டது.)

எனவே, இஜ்திமாவில் வந்திருப்பவர்களும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் தாங்கள் வந்த நோக்கத்தை பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் தங்களது நேரத்தை எள்ளி நகையாடு –வதிலும், வீணானவற்றைப் பேசுவதற்கும், செலவிடுவதற்கும் பகரமாக அதிக நேரத்தை இறைவனை நினைவு கூர்வதிலும், நல்ல விஷயத்தைக் கேட்பதிலும், பேசுவதிலும் கழிக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய சபைகள் கியாமத் நாளன்று ஒருபோதும் ஏக்கத்துடன் பார்க்கப்படக்கூடிய சபைகளாக இருக்காது.

இறையச்சத்தின்படி நடப்பவர்களின் சகவாசத்தில் நேரத்தைக் கழிப்பது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன அறிவுரை கூறினார்கள்? ஒரு அறிவிப்பில் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் நம்பிக்கையாளர்களைத் தவிர வேறு எவருடனும் அமராதீர்கள். மேலும் இறையச்சமுடையவரைத் தவிர எவரும் உங்களுடைய உணவை உண்ண வேண்டாம். (சுனன் அபீதாவூது கிதாபுல் அதப் பாபு மினல் அம்ரி அன யுஜாலிஸு ஹதீஸ் 4832)

மனிதனுக்கு உலகில் பல்வேறு வகையான மக்களோடு தொடர்பு இருக்கின்றது. அவன் அவர்களைச் சந்திக்கவும் செய்கின்றான். முஸ்லிம் அல்லாதவர்களோடும் அமர்கின்றான். மனிதன் நம்பிக்கையாளர்களைத் தவிர வேறு எவருடனும் உட்காரவே கூடாது என்பது சாத்தியம் இல்லாததாகும். அன்னாருடைய கூற்றின் பொருள் என்னவென்றால், உங்களுடைய ஆழமான நட்பு மற்றும் நீங்கள் அதிகமாக அமர்ந்திருத்தல், உங்களுடைய பெரும்பாலான நேரத்தைக் கழித்தல் அப்படிப்பட்டவர்களோடு இருக்கக் கூடாது என்பதாகும். உங்களுடைய சபைகள் அதிகமாக ஈமானில் உறுதியானவர் –களோடு இருக்க வேண்டும். இறையச்சத்தின்படி நடக்கக் கூடியவர்களோடு இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்களும் தக்வா மற்றும் நன்மையில் முன்னேற முடியும்.

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆன்மாவைச் சீர்திருத்துவதற்கான ஒரு வழியாக அல்லாஹ் கூறியிருப்பது, كُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ அதாவது, எவர்கள் சொல் அளவிலும் செயல் அளவிலும் மேலும் அவர்களின் நிலையிலும் உண்மையில் நிலைத்திருக்கிறார்களோ அவர்களுடன் இருங்கள். (9:119) அதாவது, அவர்களின் பேச்சுக்களும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அவர்களது செயல்களும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் அவர்களின் எல்லா நிலையிலிருந்தும் உண்மை வெளிப்படக் கூடியதாக இருக்க வேண்டும். அதாவது அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் இதற்கு முன்பு கூறியுள்ளான். يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ அதாவது நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். இதன் பொருள் என்னவென்றால், முதலில் ஈமான் இருக்க வேண்டும். பிறகு சுன்னத்தாக தீய இடத்தை விட்டு விட வேண்டும். பிறகு உண்மையாளர்களுடன் இருக்க வேண்டும். சகவாசத்திற்கென்று ஒரு பெரும் தாக்கம் உள்ளது. அது உள்ளுக்குள்ளேயே உருவாகிக் கொண்டிருக்கின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் தினமும் விபச்சாரிகளிடம் சென்றால் பிறகு நான் விபச்சாரம் செய்கிறேனா? என்று கேட்டால் அதாவது நான் விபச்சாரம் செய்வதற்காகச் செல்வதில்லை என்று கூறினால் அவரிடம் நீ அதை ஒருநாள் செய்வாய் என்று கூற வேண்டும். அவர் ஒருநாள் இல்லாவிட்டாலும் இன்னொரு நாள் அதில் ஈடுபடுவார். ஏனென்றால், தீய சகவாசத்தின் தீய தாக்கம் ஏற்படுகின்றது. அதேபோன்று மது கடைக்குச் செல்லக்கூடிய ஒரு நபர் எவ்வளவு விலகி இருந்தாலும், நான் மது அருந்துவது இல்லை என்று கூறினாலும் ஒருநாள் கண்டிப்பாக அவர் மது அருந்துவார். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 247; 1985-ஆம் ஆண்டு பதிப்பு-இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே எப்போதும் தீய சகவாசத்திலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். பொதுவாக உலக வியாபாரங்களில் தொடர்புகள் இருக்கத்தான் செய்கின்றது. அந்நியர்களோடு தொடர்பு இருக்கின்றது. ஆனால் அந்த தொடர்புகளில் வரம்பு இருக்க வேண்டும். அவர்களின் வீணான சபைகளிலும் மனிதன் செல்ல ஆரம்பித்து விடும் அளவிற்கு அவை இருக்கக் கூடாது. பெரும்பாலான தீமைகள் இதுபோன்ற வீணான சபைகளில்

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

கலந்து கொள்வதனால் ஏற்படுகின்றன. மாறாக, இங்குள்ள மக்களும் கூட அதை வெளிப்படுத்து –கின்றனர்.

சில ஆங்கிலேயே பெண்கள் இதை வெளிப்படுத்துகின்றனர். அதாவது எங்களுடைய கணவர்கள் நல்லவர்களாக இருந்தனர். சில நண்பர்களின் காரணத்தினால் அவர்களிடம் தீமைகள் உருவாகி விட்டன. அவர்கள் தீய, அசுத்தமான சபைகளுக்குச் செல்ல ஆரம்பித்து விட்டனர் என்கின்றனர். ஆக, முஸ்லிம் அல்லாத இவர்களுக்குக் கூட அந்த உணர்வு வந்து விட்டது. எனவே நாமோ மிக அதிகமாக இதற்காக கவலைப்பட வேண்டும்.

இதைத் தடுப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் மார்க்கமற்ற மக்களோடு அதிகமாக அமர்தலோ மற்றும் உணவு உண்பதோ உங்களை மார்க்கத்தை விட்டு தூரம் விலக்கி விடும்.

எனினும், நிச்சயமாக தப்லீகிற்காகவோ அல்லது நல்ல விஷயங்களைக் கூறுவதற்காகவோ கண்டிப்பாக தொடர்பிருக்க வேண்டியதுதான். அது அல்லாமல் தப்லீக் நடைபெற முடியாது. ஆனால் அதற்கு அவர்களை நமது சபைகளுக்கு அழைத்து வர வேண்டும். ஏனென்றால் இந்த நன்மையான சபைகள் தமது தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன. நமது மாநாடுகளில் நிகழ்ச்சிகளில் பங்கு பெறக்கூடிய ஏராளமானோர் இதை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். அதாவது இங்கு வந்த பிறகு எங்களுடைய நிலைமை முற்றிலும் மாறி விட்டது என்கின்றனர்.

சகவாசத்தின் தாக்கத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மனிதன் ஒரு தூய உண்மையான மனிதரோடு அமரும் போது அவரிடம் உண்மை வேலை செய்ய ஆரம்பிக்கின்றது. ஆனால் உண்மையாளர்களின் நட்பை விட்டு விட்டு தீயவர்களின் நட்பை கைக் கொண்டால் அவர்களிடம் தீமை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவேதான் ஹதீஸ்கள் மற்றும் திருக்குர்ஆனில் தீய நட்பிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்ற வலியுறுத்தல் காணப்படுகிறது. மேலும் எங்கு அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் இழிவுபடுத்தப் –படுகின்றார்களோ அந்த சபைகளிலிருந்து உடனடியாக எழுந்து விட வேண்டும். இல்லை–யென்றால் அவரும் கூட அந்த தீய செயல்களைச் செய்தவர்களோடு எண்ணப்படுவார் என்று எழுதப்பட்டுள்ளது.

மேலும் அன்னார் கூறினார்கள்: மேலும் உண்மையாளர்களோடு அமர்பவர்கள் அவர்க–ளுடனேயே எண்ணப்படுகின்றார்கள். எனவே மனிதன் كُونُوا مَعَ الصّٰدِقِيْنَ அதாவது, உண்மையாளர் –களோடு ஆகி விடுங்கள் என்ற கூற்றின்படி செயல்படுவது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள் : ஹதீஸில் வருகிறது. அல்லாஹ் மலக்குமார்களை உலகிற்கு அனுப்புகிறான். அவர்கள் தூயவர்களின் சபைகளுக்கு வருகின்றனர். மேலும் அவர்கள் திரும்பிச் செல்லும்போது அல்லாஹ் அவர்களிடம் நீங்கள் என்ன கண்டீர்கள்? என்று கேட்பான். அவர்கள் கூறுவார்கள். நாங்கள் ஒரு சபையைக் கண்டோம். அவர்கள் உன்னை நினைவு கூர்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவர் அவர்களோடு அவ்வாறு செய்யவில்லை. ஆனால் அங்கு அமர்ந்திருந்தார். அப்போது அல்லாஹ் கூறுவான். இல்லை. அவரும் கூட அந்த சபையினரைச் சார்ந்தவரே ஆவார். ஏனென்றால் إِنَّهُمْ قَوْمٌ لَا يَشْقَى جَلِيْسُهُمْ அதாவது, அவர்கள் எப்படிப்பட்ட சமுதாயமாக இருக்கின்றனர் என்றால் அவர்களுக்கு அருகில் அமர்பவர்கள் துர்பாக்கியசாலிகளாக இருப்பதில்லை.

அன்னார் கூறினார்கள்: இதிலிருந்து தெளிவாகத் தெரிய வருவது என்னவென்றால், உண்மையாளர்களின் நட்பினால் எந்த அளவுக்கு நன்மை உள்ளது. எனவே, அதுபோன்ற சகவாசத்தை விட்டு தூரம் இருப்பவர் துர்பாக்கியசாலி ஆவார். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 249; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, நம்பிக்கையாளர்களுடைய சகவாசம் மற்றும் சபைகளில் அமர்பவர்கள் அல்லாஹ்வுடைய அருளைப் பெறக் கூடியவர்களாக ஆகி விடுகின்றார்கள். அது எப்படிப்பட்ட சபை என்றால் அது இறைவனை நினைவு கூறுவதால் நிரம்பி இருக்கும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பெரும்பாலார் நாவினால் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அவர்களிடம் நாத்திகம் இருப்பதைக் காண முடியும். ஏனென்றால் உலகப் பணிகளில் மூழ்கும்போது இறைவனுடைய மகத்துவத்தை அவர்கள் முற்றிலும் மறந்து விடுகின்றனர். எனவே நீங்கள் துஆவின் மூலமாக இறைவனிடம் ஞானத்தைக் கேட்பது மிகவும் அவசியமானதாகும். அது அல்லாமல் ஒருபோதும் நிச்சய உறுதியைப் பெற முடியாது. அல்லாஹ்வுடன் தொடர்பைத் துண்டிப்பது என்பது ஒரு மரணமாகும் என்கின்ற அறிவு இருக்கும் போதுதான் அது சாத்தியமாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு துஆ செய்கின்ற அதே வேளையில் திட்டங்களையும் ஒருபோதும் கைவிட்டு விடாதீர்கள். தீமையைத் தூண்டுகின்ற அனைத்து சபைகளையும் விட்டு விடுங்கள். அத்தோடு துஆவும் செய்து வாருங்கள். மேலும், நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இறை நியதிக்கேற்ப மனிதனிடம் உருவாகக்கூடிய விஷயங்களிலிருந்து இறை உதவி இல்லாமல் ஒருபோதும் விடுதலை பெற முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: தொழுகை ஐவேளை நிறைவேற்றப்படுகின்றது. அதில் என்ன சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்றால், அவர் மன எழுச்சிகள் மற்றும் சிந்தனைகளில் இருந்து தொழுகையைப் பாதுகாப்பாக வைக்கவில்லை என்றால் அந்நிலையில் அது உண்மையான தொழுகையாக இருக்காது. குனிந்து எழுந்தித்தல் மற்றும் சடங்கு சம்பிரதாயமாக நிறைவேற்றுவது என்பது தொழுகை கிடையாது. தொழுகை என்பது உள்ளமும் உணரக் கூடியதாகும். ஆன்மா உருகி இறை சந்நிதியில் விழுந்து விட வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: முடிந்தவரை உருக்கத்தை ஏற்படுத்துவற்கு முயற்சி செய்ய வேண்டும். உள்ளத்திலுள்ள பாவங்கள் நீங்குவதற்காக உருக்கமாகக் கேளுங்கள். அதுபோன்ற தொழுகைகள்தான் அருளுக்குரியதாக இருக்கின்றன. எவர் அதில் நிலைத்திருப்பாரோ அவர் இரவிலோ அல்லது பகலிலோ ஒரு ஒளி வானத்திலிருந்து அவருடைய உள்ளத்தில் இறங்குவதைக் காண்பார். மேலும் நஃப்ஸே அம்மாரா உடைய அதாவது தீமையை தூண்டக்கூடிய ஆன்மா குறைந்து விடும். பாம்பில் ஒரு கொலை செய்யக்கூடிய விஷத்தன்மை இருப்பதைப் போன்று நஃப்ஸே அம்மாராவிலும் ஒரு விஷத்தன்மை இருக்கிறது. மேலும் யார் அதை உருவாக்கினானோ அவனிடமே அதற்கான சிகிச்சையும் உள்ளது. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 123; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அதாவது, இறைவனிடமே தீங்கை அகற்றுவதற்கான சிகிச்சையும் உள்ளது. அவனுக்கு முன்னால் குனியுங்கள். அவனிடம் உதவி கேளுங்கள். உலகம் மற்றும் அதன் தீய தாக்கங்கள் மற்றும் தீய சபைகளிலிருந்து எப்போதும் பாதுகாப்பாக இருப்பதற்காக அவனிடம் உதவி கேளுங்கள்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழக்கம் என்னவாக இருந்ததென்றால், சபையை முடிக்கும் முன் எழுந்திருக்கும் போது அன்னார், அல்லாஹ்வே! நீ தூயவனாவாய். உனது புகழின் மீது ஆணையாக கூறுகிறேன். உன்னைத் தவிர வணக்கத்திற்கு உரியவன் வேறு யாருமில்லை. நான் உன்னிடம்

S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
◗ Panchagavya
◗ Pest Repeller
◗ See Veed Extract
◗ All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

Classic Mobile's & Watch,
Hiba watch & Mobiles
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
Metro Zone
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

பாவமன்னிப்புக் கோருகிறேன். மேலும் உன் பக்கமே நான் திரும்புகின்றேன் என்று துஆ செய்வார்கள். (சுனன் அபூதாவூது கிதாபுல் அதப் பாபு ஃபீ கஃப்பாரத்துல் மஜ்லிஸி ஹதீஸ் 4859)

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு சில வார்த்தைகள் உள்ளன. அவற்றை ஒருவர் சபையிலிருந்து எழும் முன் மூன்று முறை கூறினால் அல்லாஹ் அதன் காரணமாக அவர் அந்த இடத்தில் செய்த பாவங்களை மறைத்து விடுவான். மேலும் எவரேனும் இந்த வார்த்தைகளை நல்ல சபையில் கூறி இருந்தால் அது அவர்களோடு சேர்த்து விடப்படும். அவைகள் என்னவென்றால்,

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ لَا اِلٰهَ اِلَّا اَنْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ

அதாவது அல்லாஹ்வே! நீ தூயவன் ஆவாய். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. நான் உன்னிடம் மன்னிப்பு கோருகின்றேன். மேலும் உன் பக்கமே திரும்பு –கின்றேன். மேலும் விரும்பத்தகாத செயல்கள் என்னிடமிருந்து வெளிப்பட்டிருந்தால் அதன் தீய தாக்கத்திலிருந்து என்னை பாதுகாப்பாயாக. (சுனன் அபூதாவூது கிதாபுல் அதப் பாபு ஃபீ கஃப்பாரத்துல் மஜ்லிஸி ஹதீஸ் 4857)

இந்த துஆ விரும்பத்தகாத அந்த விஷயத்திலிருந்து பாதுகாப்பாக வைக்கின்றது. மேலும் நல்ல விஷயங்கள் உள்ள சபைகளிலிருந்து அதிகம் அதிகமாக பலன் பெறுவதற்குக் காரணமாக அமைகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று இறைவனுடைய உதவி இல்லாத வரை ஒருபோதும் விடுதலை பெற முடியாது. எனவே எப்போதும் அல்லாஹ்வின் உதவியை தேடிக் கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் நல் வாய்ப்பை வழங்குவானாக. நாம் எப்போதும் தீய சபைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்போமாக. மேலும் ஒருவேளை அறியாமல் அதில் இணைந்து விட்டால் அதனுடைய தீய தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருப்போமாக. எப்போதும் தூய சபைகளை தேடுபவர்களாக இருப்போமாக. மேலும் அதில் அமர்பவர்களாக இருப்போமாக. தூய சபைகளின் தூய்மை மற்றும் அல்லாஹ்வின் அருளிலிருந்து பலன் பெறக் கூடியவர்களாக இருப்போமாக. அல்லாஹ் எப்போதும் நம்மை ஷைத்தானின் தாக்குதலிருந்து பாதுகாப்பாக வைப்பானாக. நம்மோடு மன்னித்தலோடும் கருணையோடும் நடந்து கொள்வானாக. நம்மை எப்போதும் ஜமாஅத்தோடும் கிலாஃபத் அமைப்போடும் இணைத்து வைப்பானாக. மேலும் ஒவ்வொரு குழப்பவாதியின் குழப்பத்தின் தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அது நமது ஆப்பிரிக்க அஹ்மதி மதிப்பிற்குரிய பிலால் அப்துஸ் ஸலாம் சாஹிப் உடையதாகும். அமெரிக்காவின் ஃபிலடெல்ஃபியாவில் வசித்து வந்தார்கள். செப்டம்பர் 13 –ஆம் தேதி வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இந்த வருடம் யூ.கே –வின் ஆண்டு மாநாட்டிற்கும் வருகை தந்திருந்தார்கள். முதல் நாள் மாலை வேளையில் பேன் ஆப்பிரிக்கன் அஸோஸியேஷன் உடைய ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது திடீரென அவர்களுக்கு பக்கவாத தாக்குதல் ஏற்பட்டது. நிலைமை மோசமாகியது. உடனடியாக மருத்தவமனை எடுத்துச் செல்லப்பட்டார்கள். இங்கு சில நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் வந்தார்கள். உடல்நிலை வெளிப்படையாகப் பார்க்கும்போது சரியாகவும் ஆகி இருந்தது. என்னை சந்திக்கவும் வந்திருந்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அமெரிக்கா திரும்பிச் சென்று விட்டார்கள். அன்னார் 1934 –ல் ஃபுளோரிடாவில் பிறந்தார்கள். ஆறு வயது இருக்கும்போது அவர்களுடைய பெற்றோர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். 8 வயதான போது போர்டிங்கிற்குச் சென்று விட்டார்கள். அங்கு இவர்கள் பைபிளின் போதனைகளைக் கற்றார்கள். பிறகு பல வேலைகளைச் செய்தார்கள். சில காலம் இராணுவத்திலும் பணி செய்துள்ளார்கள். 1957 –ல் Minister of Gospel ஆனார்கள். ஆனால் கிறித்தவத்தின் சில கொள்கைகளில் அன்னாருக்கு கருத்து வேறுபாடு இருந்தது.

1960 –ல் ஒரு சுன்னி முஸ்லிமைச் சந்தித்தார்கள். அவர் அன்னாருக்கு ஜமாஅத் வெளியிட்ட திருக்குர்ஆனை வழங்கினார். அன்னார் அந்த மனிதரிடம் இந்த திருக்குர்ஆன் யார் வெளியிட்டது? என்று கேட்டார். அதற்கு அந்த மனிதர், இவர்கள் முஸ்லிம்கள் இல்லைதான். ஆனால் இவர்களுடைய புத்தகங்கள் சிறந்ததாகும் என்று கூறினார். அன்னார் அந்த மனிதரிடம் ஓர் அஹ்மதியின் முகவரியை அறிந்து கொண்டு அவரின் கடைக்குச் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து கேட்டபோது இது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி என்று கூறப்பட்டது.

எவ்வாறிருப்பினும் அன்னார் அதற்குப் பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஃபிலடெல்ஃபியாவில் அஹ்மதிகளோடு சேர்ந்து தப்லீகின் பணியைச் செய்து வந்தார்கள். பிலால் அப்துஸ் ஸலாம் சாஹிபிற்கு திருக்குர்ஆன் கற்கும் ஆர்வம் அதிகமாக இருந்தது. நான்கு மணி நேரம் பயணம் செய்து அன்னார் திருக்குர்ஆன் கற்பதற்கு ஒரு ஞாயிற்றுக்கிழமை விட்டு அடுத்த ஞாயிற்றுக்கிழமை வந்து விடுவார்கள். மேலும் சத்ர் ஜமாஅத் ஃபிலடெல்ஃபியா ஆகவும் மேலும் நேஷனல் செகரட்டரி வக்ஃபே ஜதீது ஆகவும், தர்பிய்யத் நவ் முபாயீன் பொறுப்பிலும் தொண்டாற்றியுள்ளார்கள். அன்னார் வாழ்க்கையை சில காலம் அர்ப்பணித்து பால்டிமோரில் ஜமாஅத்தின் தன்னார்வ முபல்லிக்காகவும் பணியாற்றியுள்ளார்கள். அதற்குப் பிறகும் அன்னார் தப்லீகை தொடர்ந்து செய்து வந்தார்கள். கிலாஃபத்தோடு அளவு கடந்த அன்பு கொண்டவர்களாக இருந்தார்கள். ஜமாஅத் அமைப்பை பேணக் கூடியவர்களாகவும், உயர் தரமான கட்டுப்படுதலை உடையவராகவும் இருந்தார்கள். எப்போதும் கலீஃபாக்கள் பற்றி பேசப்படும்போது கண்ணீர் வந்து விடும். 1975 –ல் காதியானின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் நற்பேறும் பெற்றார்கள்.

ஃபிலடெல்ஃபியாவின் பள்ளிவாயில் கட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இது அன்னாரின் ஓர் ஆசையாகவும் இருந்தது. அதற்காக முயற்சியும் செய்து வந்தார்கள். கட்டுமானப் பணிகளின் போது தினசரி முழு நாளும் அங்கு கேபினில் அமர்ந்து துஆ செய்து கழிப்பார்கள். மிக விரைவாக பள்ளிவாயில் கட்டி முடிக்க வேண்டும் என்று முயற்சித்து வந்தார்கள். இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் முடிந்து விடும் என்று நம்புகின்றேன்.

இவர்களின் மனைவி ஹிஸ்னிஸ்டன் பாஸ்டர் ஆவார்கள். அஹ்மதியாக இருக்கவில்லை. ஆனால் எப்போதும் அன்னார் இவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். பின் விட்டுச் சென்றவர்களில் இரண்டு மகனும், இரண்டு மகளும் உள்ளனர். ஒரு மகன் உமர் அப்துஸ் ஸலாம் சாஹிப் 1993 –ல் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். இவர் அஹ்மதி ஆவார். மற்றவர்கள் அஹ்மதிகள் அல்ல.

அமெரிக்காவிலுள்ள முபல்லிக் அப்துல்லாஹ் தீபா சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: அன்னார் அமெரிக்கா ஜமாஅத்தின் மிகவும் செயல் துடிப்புள்ள ஓர் உறுப்பினராக இருந்து வந்தார்கள். மிகவும் நல்லொழுக்கமுடைய, அனைவரிடமும் அன்பு செலுத்தக்கூடிய மனிதராக இருந்தார்கள். மக்களுக்கு உதவி செய்து வந்தார்கள். ஜமாஅத் பணிகளில் முன் வரிசையில் நிற்பார்கள். இளைஞர்களோடு குறிப்பான தொடர்பு இருந்தது. அவர்களுக்கு தர்பிய்யத் வழங்கவும் அவர்களை சமூக தீமைகளிலிருந்து பாதுகாப்பதற்கு எப்போதும் முயற்சி செய்து வந்தார்கள். பல இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றி இருக்கின்றார்கள். அவர்களை நேரான வழியில் செல்ல அறிவுறுத்தி வந்தார்கள். இவர்களின் காரணமாக இளைஞர்களின் ஒரு பெரும் பகுதி சமூகம் மற்றும் ஜமாஅத்தினுடைய செயல் துடிப்புள்ள அங்கமாக ஆகி விட்டது.

அன்னார் மருத்துவமனையில் நோயுற்றிருந்த போது அன்னாரின் தலை மாட்டில் எப்போதும் திருக்குர்ஆன் இருக்க வேண்டும் என்று வழிகாட்டியிருந்தார்கள். அவர்கள் இங்கு நோயுற்றிருந்த போது கூறினார்கள். அல்லாஹ் எனக்கு புதிய வாழ்வை வழங்கி இருக்கின்றான். எனது சில பணிகள் எஞ்சியுள்ளன. அதனை நான் செய்து முடிக்க விரும்புகின்றேன் என்றார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று கிலாஃபத்தோடு அளவு கடந்த பாசமும் அன்பும் இருந்தது. என்னைச் சந்திக்கும் போதெல்லாம் அவர்களுடைய முகத்தில் ஒரு வித்தியாசமான சிரிப்பு இருக்கும். மேலும் கலப்பற்ற தன்மையும், விசுவாசமும் அவர்களுடைய கண்களில் தெரியும். அல்லாஹ் இவர்களின் பதவியை உயர்த்துவானாக. இவர்களோடு மன்னித்தலோடு நடந்து கொள்வானாக. மேலும் அவர்களின் எஞ்சியுள்ள சந்ததிகளுக்கும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

# அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம்

✪ ✪ ✪ மவ்லானா அதாபுவல் முஜீப் ராஷித் (இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாயிலின் இமாம்) ✪ ✪ ✪

***(இரண்டாம் பாகம்)***

**நபிமொழிகள்:**

சில திருக்குர்ஆன் வசனங்களிலிருந்து நமது நேசத்திற்குரிய எஜமானர் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் கூறிய கட்டளைகளிலிருந்து அருளையும் வழிகாட்டலையும் நாம் பெற வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த மனிதரிடமிருந்தும் அறிவைக் கற்றுக் கொள்ள -வில்லை. எல்லாவற்றையும் நன்கு அறிந்துள்ள இறைவன் சுயமே அவர்களின் ஆசிரியராக இருந்தான். உண்மையான ஆசிரியன் அவர்களுக்கு எந்த அளவு அறிவுகளையும் ஞானங்களையும் கற்றுக் கொடுத்தான் என்றால் அதன் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்கள் முழு உலகிற்கும் வழிகாட்டக் கூடியவர்களாக ஆகி விட்டார்கள். பொருள் தியாகம் தொடர்பாகவும் அவர்கள் தமது சமுதாயத்திற்கு ஈடிணையற்ற வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள். முன்மாதிரியாக சில கட்டளைகளை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன். அன்னாரது ஒவ்வொரு கட்டளையும் கவனத்துடன் படிப்பதற்கும் நினைவில் வைப்பதற்கும் தகுதியுள்ளவையாக இருக்கின்றன.

ஒரு ஹதீஸே குத்ஸியில் இவ்வாறு வருகின்றது. அல்லாஹ் இவ்வாறு கூறுவதாக பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆதமின் மகனே! நீ திறந்த உள்ளத்துடன் இறைவனின் வழியில் செலவு செய்வாயாக! அல்லாஹ்வும் உனக்காக செலவு செய்வான். (முஸ்லிம் கிதாபுஸ் ஸகாத் ஹதீஸ் எண் 2308. பாபுல் ஹஸ்ஸி அலன்ன.்.பகதி வ த.்.ப்ஸீருல் முஅல்லகி பில்ஹல்.்.ப)

- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எந்த மனிதனுக்கு அல்லாஹ் பொருளை வழங்கி, பிறகு அந்தப் பொருளை அதற்குரிய சரியான இடத்தில் செலவு செய்வதற்குமுரிய வழக்கத்திற்கு மாற்றமான நல்வாய்ப்பையும் தைரியத்தையும் வழங்கியுள்ளானோ அந்த மனிதன் பெருமிதம் கொள்வதற்குத் தகுதி உடையவனாக இருக்கின்றான்.” (புகாரி கிதாபுஸ் ஸக்காத். பாபு இன்.்.பாக்குல் மாலி.்.பீ ஹக்கிஹி)
- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எவரிடம் அதிகமாக செல்வம் இருக்கின்றதோ அவர் செல்வந்தர் அல்ல. மாறாக, எவர் உள்ளத்தால் தன்னிறைவு பெற்றவராக இருக்கின்றாரோ அதாவது இறைவனின் வழியில் மனந்திறந்து செலவு செய்கின்றாரோ அவரே உண்மையான செல்வந்தர் ஆவார்.” (திர்மிதி அப்வாபுஸ் ஸுஹத் பாபு மாஜாஅ அன் அல்கினா கினன் ன.்.ப்ஸி)
- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எந்த நபர் அல்லாஹ்வின் வழியில் சிறிது செலவு செய்கின்றாரோ அவருக்கு அதற்குப் பகரமாக எழுநூறு மடங்கு அதிகமாக நற்கூலி கிடைக்கின்றது.” (திர்மிதி பாபு.்.பஸ்லின் ன.்.பகதி .்.பீ ஸபீலில்லாஹி)
- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நன்மைகளின் எல்லா கதவுகளையும் விட சிறந்த கதவு ஸதகா கொடுப்பதும் தானதருமங்கள் கொடுப்பதும் ஆகும்.” (அல்மு.்.ஜமுல் கபீரி லில் கைராத்தி ரகமுல் ஹதீஸ் 12663. கன்ஸுல் உம்மால் ரகமுல் ஹதீஸ் 16015)
- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இரண்டு மலக்குகள் இறங்குகின்றனர். அவர்களில் ஒருவர், அல்லாஹ்வே! இறைவழியில் செலவு செய்பவருக்கு சிறந்த நற்கூலியை வழங்குவானாக. அவரது அடிச்சுவட்டில் செல்கின்ற வேறு மக்களையும் உருவாக்குவாயாக என்று கூறுகின்றனர். இன்னொருவர், அல்லாஹ்வே! பொருளை தடுத்து வைத்துக் கொள்பவனுக்கு அழிவையும் நாசத்தையும் விதித்து விடுவாயாக என்று கூறுகின்றார்.” (புகாரி கிதாபுஸ் ஸகாதி பாபு கவ்லுல்லாஹித்தஆலா .்.பஅம்மா மன்அ.்.தா வத்தகா)

(எந்த மக்கள் நல்ல சந்ததிகளின் அருளைப் பெறாமல் இருக்கின்றார்களோ அவர்களுக்கு இந்த நபிமொழியில் ஒரு மகத்தான போதனை இருக்கின்றது. சோதித்துப் பார்ப்பவர்களே! இந்த மருந்தையும் சோதித்துப் பாருங்கள்.)

- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எந்த பொருளை இறைவழியில் செலவு செய்து முன்னே அனுப்பி வைத்து விட்டீர்களோ அதுவே உங்களது அசல் பொருளாகும். எது பின்னால் எஞ்சியிருக்கின்றதோ அது வாரிசுகளின் பொருளாகும்.” (முஸ்லிம் கிதாபுஸ் ஸக்காதி பாபு பயானி அன் அ.்.ப்ஸலுல் ஸதகதி அஸீஹுஸ்ஸேகி ஹதீஸ் எண் 2383)
- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒரு முஸ்லிம் மனிதர் ஸதகா கொடுப்பது வாழ்நாளை அதிகரிக்கின்றது. மேலும், தீய மரணத்திலிருந்து காப்பாற்றுகிறது.” (கன்ஸுல் உம்மால் ரகமுல் ஹதீஸ் 16062)
- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு சோதனை இருக்கின்றது. எனது சமுதாயத்திற்குரிய சோதனை செல்வமாகும்.” (திர்மிதி கிதாபுஸ் ஸுஹது பாபு மாஜா அன்ன.்.பகதி ஹாதிஹில் உம்மத்தி .்.பில் மாலி)
- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “அல்லாஹ்வின் வழியில் எண்ணி எண்ணி செலவு செய்யாதே. அவ்வாறு செய்தால் அல்லாஹ்வும் உங்களுக்கு எண்ணி எண்ணியே தருவான். உங்களது பணப்பையின் வாயை கருமித்தனத்தின் காரணமாக திறக்காமல் அடைத்து வைத்து விட்டு அமர்ந்து விடாதீர்கள். பிறகு, அது திறக்காமலேயே வைக்கப்பட்டு விடும். எந்த அளவு சக்தி இருக்கின்றதோ அந்த அளவு மனம் திறந்து செலவு செய்யுங்கள். (புகாரி கிதாபுஸ் ஸகாத்தி பாபுத் தஹ்ரீஸி அலஸ்ஸதகதி வஷ்ஷபாஅதி .்.பீஹா அய்ஸன் பாபுஸ் ஸதகதி .்.பீமஸ்ததாயி)

திருக்குர்ஆனிலிருந்தும் நபிமொழிகளில் இருந்தும் கிடைக்கின்ற இந்த வழிகாட்டல்கள் இந்த உண்மையை நமக்குத் தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுகின்றது. அதாவது, மார்க்கத் தேவைகளுக்காக செய்யப்படும் பொருள் தியாகமானது இறை நெருக்கம் மற்றும் இறை விருப்பம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் உறுதியான வழியாகும். இந்த பொருள் தியாகங்களின் விளைவாக ஒருபுறம் தியாகங்கள் செய்பவருக்கு அல்லாஹ்வின் அன்பு கிடைக்கின்றது. மறுபுறம் அத்தகைய கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட அடியார்களுக்கு கருணைமிக்க இறைவன் இவ்வுலகிலேயே வழங்க ஆரம்பித்து விடுகின்றான். தன் தரப்பிலிருந்து அவர்களது பைகளை அருள்களால் நிரப்பி விடுகின்றான். கணக்கில்லாமல் அவர்களுக்கு வழங்குகின்றான். அவர்களது துன்பங்களையும் கவலைகளையும் அகற்று -கின்றான். அவர்களது வாழ்க்கையில் அருள்களை வழங்குகின்றான். அது மட்டுமல்ல. அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலேயே சுவர்க்கத்திற்குரிய சூழலை வழங்குகின்றான். சுயமே அவர்களது தேவைகளை நிறைவேற்ற அவனே போதுமானவனாக இருக்கின்றான். இறைவனின் வழியில் பொருள் தியாகங்கள் செய்பவர்களுக்கு மறுமையில் சுவர்க்கத்தைப் பற்றிய உறுதியான வாக்குறுதியை உண்மையான வாக்குறுதியை வழங்குகின்ற இறைவன் வழங்கியுள்ளான். எவ்வகையிலும் அவனது வாக்குறுதியில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்கள்:**

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது எழுத்துக்களிலும் மல்.்.பூஸாத்திலும் அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்வது தொடர்பாக மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும், மீண்டும் மீண்டும் தம்மை ஏற்றுக் கொண்டவர் -களுக்கு அதன் முக்கியத்துவம், பலன்கள், அதன் அவசியம் ஆகியவை தொடர்பாக தெரிவித்தவாறு இந்த வழியில் மேலும் முன்னேறிச் செல்வதற்கு போதனை செய்துள்ளார்கள். இந்த விரிவான கருவூலத்திலிருந்து நான் சில முன்மாதிரிகளை உங்களுக்கு எடுத்துக் கூறுகின்றேன். அறிவு, ஞானம் மற்றும் ஆன்மீக தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வலுவான கட்டளைகளுக்கு மிகவும் மகத்தான அந்தஸ்து இருக்கின்றது. இந்த சொற்களுக்கு தங்களது உள்ளங்களில் இடமளிக்கின்ற அத்தகைய உள்ளங்களின் தேவை இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: “அல்லாஹ்வின் வழியில் உங்களது எல்லா ஆற்றல்களையும் சக்திகளையும் வாழ்நாள் இருக்கின்ற வரை அர்ப்பணித்து விடுங்கள். அதன் மூலம் அந்த தூய வாழ்வின் வாரிசாகி விட வேண்டும்.” (அல் ஹகம் தொகுதி 4 எண் 29; 16 ஆகஸ்ட் 1900 பக்கம் 3 மல்.்.பூஸாத் தொகுதி 2 பக்கம் 90)

உண்மையிலேயே உணவளிப்பவன் இறைவனாக இருக்கின்றான். எந்த நபர் அவன் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ அவர் ஒருபோதும் ரிஸ்கிலிருந்து விலக்கி வைக்கப்பட மாட்டார். அவன் எல்லா வகையிலும் ஒவ்வோர் இடத்திலிருந்தும் தன் மீது நம்பிக்கை வைக்கின்ற நபருக்கு ரிஸ்கை எட்ட வைக்கின்றான். என் மீது நம்பிகை வைப்பதற்கு நான் வானத்திலிருந்து

பொழிவேன். அவர்களது பாதங்களிலிருந்து (தேவைப்படுபவற்றை) வெளியில் வரச் செய்வேன் என்று இறைவன் கூறுகின்றான். எனவே, ஒவ்வொரு நபரும் இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்." (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 390)

எந்த நபர் முக்கியமான பணிகளுக்காக பொருளைச் செலவு செய்கின்றாரோ அவர் பொருளைச் செலவு செய்வதால் அவரது பொருளில் குறைவு ஏற்பட்டு விடும் என்று என்னால் நம்ப முடியாது. மாறாக, அவரது பொருளில் அபிவிருத்தி ஏற்படும். எனவே, இறைவன் மீது நம்பிக்கை வைத்தவாறு முழுமையான நல்லொழுக்கத்-துடனும், எழுச்சியுடனும், தைரியத்துடனும் இவ்வழியில் செயலாற்ற வேண்டும். இதுவே தொண்டு செய்வதற்கான நேரமாக இருக்கின்றது. இதற்குப் பிறகு அந்த நேரம் வரவிருக்கின்றது. அப்போது தங்க மலையையே இவ்வழியில் செலவு செய்தாலும் இந்த நேரத்தில் செலவு செய்யப்படும் பைசாக்களுக்கு சமமாக அது இருக்காது. எனவே, இறைவன் தொடர்ச்சியாக எனக்கு இதனை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். அதாவது, உண்மையாகவும் உறுதியாகவும் தமது பிரியத்திற்குரிய பொருளை இவ்வழியில் செலவு செய்பவரே இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுவார். நீங்கள் இரண்டு பொருள்களை நேசிக்க முடியாது என்பது வெளிப்படையான விஷயமாகும். நீங்கள் பொருளையும் நேசித்து இறைவனையும் நேசிப்பது என்பது உங்களால் சாத்தியமற்றதாகும். ஒன்றை மட்டுமே நீங்கள் நேசிக்க முடியும். எனவே, இறைவன் மீது அன்பு கொள்கின்ற அந்த நபர் நற்பாக்கியம் பெற்றவர் ஆவார். உங்களில் எவர் இறைவன் மீது நேசம் வைத்தவாறு தனது பொருளை அவனது வழியில் செலவு செய்வாரோ அவரது பொருளில் மற்றவர்களை விட அதிகம் பரக்கத் வழங்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஏனென்றால், செல்வம் தானாக வருவதில்லை. மாறாக, அது இறைவனின் நாட்டப்படியே வருகின்றது. எனவே, எந்த நபர் இறைவனுக்காக தனது செல்வத்தின் சில பகுதிகளை விட்டு விடுகின்றாரோ அவர் கண்டிப்பாக அதைப் பெற்றுக் கொள்வார். ஆனால், எவர் செல்வத்தின் மீது நேசம் வைத்து இறைவனின் வழியில் அவர் செய்ய வேண்டிய தொண்டை செய்யாமல் இருக்கின்றாரோ அவர் கண்டிப்பாக அந்த செல்வத்தை இழந்து விடுவார்.

செல்வம் உங்களது முயற்சியினால் வருகின்றது என்று எண்ணாதீர்கள். மாறாக, அது இறைவனிடமிருந்தே வருகின்றது. நீங்கள் உங்களது செல்வத்தின் ஒரு பகுதியை வழங்கி அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் தொண்டு செய்து அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் சிறிது நன்மை செய்திருக்கின்றீர்கள் என்று எண்ணாதீர்கள். மாறாக, உங்களை இந்த தொண்டிற்காக அழைத்திருப்பது அவனது அருளாகும். நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். இறைவன் உங்களது தொண்டுகளுக்கு அணுவளவு கூட தேவையுடையவன் அல்ல. எனினும் உங்களுக்கு தொண்டு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி இருப்பது அவன் உங்கள் மீது செய்திருக்கும் அருளாகும்." (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 496-497)

"கருமித்தனமும் ஈமானும் ஒரே உள்ளத்தில் ஒன்று சேர முடியாது என்று நான் உறுதியாகக் கருதுகின்றேன். எந்த நபர் உண்மையான உள்ளத்துடன் இறைவன் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ அவர் தனது பெட்டியில் அடைபட்டுக் கிடக்கின்ற அந்த செல்வத்தை மட்டும் தனது செல்வமாகக் கருதுவதில்லை. மாறாக, அவர் மேலான இறைவனின் எல்லா கருவூலங்களையும் தமது கருவூலங்களாகக் கருதுகின்றார். இதனால் ஒளியினால் இருள் விலகுவது போன்று செல்வத்தை தடுத்து

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)


குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com


## திருக்குர்ஆனிலிருந்து...

*நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)*

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக்-கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷைத்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

## திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப்போல)க் கொடுக்கவும், கட்டளையிடுகின்றான்... (16:91)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*தீயவற்றைப் பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. ஆயினும் அநீதிக்கு ஆளானவரைத் தவிர. (அவர்கள் அநீதியை வெளியிடலாம்). அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (41:49)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.**
(16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் உங்கள் செல்வத்தை உங்களுக்கிடையே தவறான முறையில் விழுங்கி விடாதீர்கள். நீங்கள் தெரிந்து கொண்டே மக்களின் செல்வத்தின் ஒரு பகுதியினை தகாத முறையில் விழுங்கி விட வேண்டும் என்பதற்காக, அதை அதிகாரி -களிடம் இழுத்துச் செல்லாதீர்கள். (2:189)

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தவ்ஹீதிற்கு காரணமானவரும், தவ்ஹீதை உருவாக்கியவரும், தவ்ஹீதின் தந்தையும், தவ்ஹீதின் தலையூற்றும், தவ்ஹீதின் முழுமையான வெளிப்பாடும் நபி மட்டுமே ஆவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவன் தன்னைத்தானே உலகத்திற்கு வெளிப்படுத்திக் காட்ட விரும்பும்போது அவனது வல்லமைகளின் தோற்றமாக இருக்கின்ற நபியை உலகில் அனுப்புகின்றான். தனது வஹியை அவர் மீது இறக்குகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எப்போதும் இறைவன் என்ற பெயரிலுள்ள அந்த மறைவான கருவூலம் நபிமார்கள் மூலமாகவே அடையாளங் கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உண்மையான தவ்ஹீது, நபியின் மூலமாகவே வெளிப்படுகின்றது. அது அல்லாமல் அது நடக்க முடியாது என்பது தெளிவாக தெரியும் போது அது நபியின் மீது ஈமான் கொள்ளாமல் எப்படி கிடைக்க முடியும்? தவ்ஹீது எவ்வாறு நிலைத்திருக்க முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 114-117)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவ்வாறு கண்ணில் ஒளியிருந்தும் கூட சூரியனின் தேவை அதற்கு இருக்கின்றதோ அவ்வாறே கண்ணுக்கு ஒப்பாக இருக்கின்ற உலகின் அறிவுகள் எப்போதும் நபித்துவம் எனும் சூரியனின் தேவையுடையதாக இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உங்களால் கண்ணால் மட்டும் எதையாவது பார்க்க முடியுமா என்ன? ஒருபோதும் முடியாது. இவ்வாறே நபித்துவத்தின் ஒளி இல்லாமல் எதையும் உங்களால் பார்க்க முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார்.**
(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவனின் இருப்பைப் பற்றி தெரிவிப்பவர் -களும், அவன் ஒருவன்; அவனுக்கு இணை இல்லை என்பதைப் பற்றிய அறிவை மக்களுக்கு கற்றுக் கொடுப்பவர்களும் நபிமார்கள் மட்டுமே ஆவர் என்பதும் நினைவில் இருக்க வேண்டும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உண்மையிலேயே அவன் (இறைவன்) இருக்கின்றான் என்பதைப் பற்றி தெரிவிப்பவர்கள் நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் மட்டுமே ஆவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 114-117)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாமின் வருகையினால் அறிவுகள் கூர்மையாகி விடுகின்றன. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 114-117)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**இறைவன் ஒவ்வோர் இடத்திலும் தனது வாக்குறுதிக்கேற்ப என்னை எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாத்தான்.**

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**இந்தக் காலக்கட்டம் ஓர் இமாம் பிறக்க வேண்டும் என்ற தேவையை ஏற்றுக் கொள்கின்றது.** (ஹகீகத்துல் வஹி ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 70-72)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் அவற்றில் அவன் நிச்சயமாக உம்மை இழிவுபடுத்த நாடுபவரை நான் இழிவுபடுத்துவேன் என்ற தனது வாக்குறுதிக்கேற்ப என் மீது தாக்குதல் நடத்துபவர்களை இழிவிற்கும் அவமானத்திற்கும் ஆளாக்கியுள்ளான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 70-72)

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 26 October 2017 Issue No. 43

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

வைக்கும் நிலை அவரை விட்டு விலகிச் சென்று விடுகின்றது. நீங்கள் ஏதாவதொரு நன்மையான பணியைச் செய்வீர்கள் என்றால், அந்த நேரத்தில் ஏதாவது தொண்டு செய்தால் அதன் மூலம் உங்களது ஈமானில் சாட்சி முத்திரையைப் பதிக்கின்றீர்கள். உங்களது வாழ்நாள் இதனால் அதிகரிக்கும். உங்களது செல்வங்களில் அருள் வழங்கப்படும்." (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 498)

"நமது பார்வையில் இன்று மிகப்பெரும் தேவையாக இருப்பது இஸ்லாத்தின் வாழ்வாகும். இஸ்லாம் எல்லா வகையான தொண்டிற்கும் தேவையுடையதாக இருக்கின்றது. அதன் தேவையை விட வேறு எந்த தேவைக்கும் நாம் முன்னுரிமை வழங்க முடியாது. இன்று மிகப்பெரும் தேவை நம்மால் இயன்ற வரை இஸ்லாத்திற்குத் தொண்டு செய்வதாகும். எந்த அளவு ரூபாய்கள் இருக்கின்றதோ அவற்றை இஸ்லாத்தை உயிர்ப்பிப்பதற்காகச் செலவு செய்ய வேண்டும்." (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 327)

"தம்மை பைஅத் செய்தவர்களில் ஒருவராகக் கருதுகின்ற ஒவ்வொரு நபரும் தமது செல்வத்தின் மூலமாகவும் இந்த இயக்கத்திற்குத் தொண்டு செய்வதற்கான நேரம் இப்போது வந்து விட்டது. பைஅத் செய்துள்ள ஒவ்வொருவரும் தனது விரிவான நிலைமைக்கு ஏற்ப உதவி செய்ய வேண்டும். அதன் மூலம் இறைவனும் அவருக்கு உதவுவான். ஒவ்வொரு நபரது உண்மையும் அவரது தொண்டின் மூலமாக அடையாளங்கண்டு கொள்ளப்படும். அன்பர்களே! இது மார்க்கத்திற்காகவும் மார்க்கத்தின் நோக்கங்களுக்காவும் தொண்டு செய்ய வேண்டிய நேரமாகும். இதனை அரிதாகக் கருதுங்கள். பிறகு ஒருபோதும் இந்த சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்காது." (கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 83)

"செல்வத்தை நேசிக்காதீர்கள். ஏனென்றால், அந்த நேரம் வந்து கொண்டிருக்கின்றது. அப்போது நீங்கள் செல்வத்தை விடாமல் இருந்தாலும் அது உங்களை விட்டு விடும்." (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 318)

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

"இந்தக் காலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமாகும். இதில் ஒரு ஜிஹாது, பொருள் தியாகத்தின் ஜிஹாதாகவும் இருக்கின்றது. ஏனென்றால், இது இல்லாமல் இஸ்லாத்தைத் தற்காத்துக் கொள்ளும் வகையில் நாம் பிரசுரங்களை வெளியிடவும் முடியாது. திருக்குர்ஆனை பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்ய முடியாது. இந்த மொழியாக்கங்களை உலகின் மூலைகள் வரை எட்ட வைக்க முடியாது. பிரச்சார நிலையங்களை திறக்க முடியாது. முபல்லிக்குகளையும், முரப்பிகளையும் உருவாக்க முடியாது. அந்த முரப்பிகளையும் முபல்லிக்களையும் ஜமாஅத்துகளுக்கு அனுப்பி வைக்க முடியாது. பள்ளிவாயில்களைக் கட்ட முடியாது. பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகள் மூலம் ஏழை மக்கள் வரை கல்விக்கான வசதிகளை எட்ட வைக்க முடியாது. மருத்துவமனைகள் மூலம் துக்கத்தில் இருக்கின்ற மனிதர்களுக்கு தொண்டு செய்ய முடியாது. எனவே, எதுவரை உலகின் எல்லா எல்லைகள் வரையிலும், ஒவ்வோர் எல்லையிலும் இருக்கின்ற ஒவ்வொரு நபர் வரையிலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்டாமல் இருக்கின்றதோ, எதுவரை ஏழைகளின் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றதோ அதுவரை இந்த பொருள் தியாகத்தின் ஜிஹாது நீடிக்கும். மேலும், தத்தமது வசதிக்கேற்பவும் வளமான நிலைமைக்கேற்பவும் ஒவ்வோர் அஹ்மதியும் இந்த ஜிஹாதில் பங்கு பெற வேண்டியது அவரது கடமையாக இருக்கின்றது." (குத்பா ஜுமுஆ, 31 மார்ச் 2006 இலண்டனிலிருந்து வெளிவரும் அல்ஃபஸ்ல் பத்திரிக்கையில் 21 ஏப்ரல் 2006 -ல் அதன் 6 -வது பக்கத்தில் இந்த குத்பா அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது)

*(தொடரும்.......)*

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

அவர்களைத் தோல்வியடையச் செய்தான்? என்னுடன் இருக்கின்ற அதே இறைவன்தான் அவர்களைத் தோல்வியடையச் செய்தான்.

**என்பத்தி ஒன்றாவது அடையாளம்:** பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த ஒரு முன்னறிவிப்பும் கூட இருக்கின்றது. يَعْصِمُكَ اللّٰهُ مِنْ عِنْدِهٖ وَلَوْ لَمْ يَعْصِمْكَ النَّاسُ நீர் ஆபத்துகளிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதை மக்கள் விரும்பாமல் இருந்தாலும் இறைவன் சுயமே உம்மை எல்லா ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பான். இது எந்தக் காலத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பு என்றால் அப்போது நான் எவரும் அறியாத ஒரு மூலையில் மறைவாக இருந்து வந்தேன். எவரும் என்னுடன் பைஅத்தின் தொடர்பையும் வைத்திருக்கவில்லை. எவரும் என் மீது பகைமையும் கொள்ளவில்லை. அதற்குப் பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹாக நான் இருக்கின்றேன் என்று வாதம் செய்தபோது எல்லா மவ்லவிகளும், அவர்களுக்குத் துணையாக நின்றவர்களும் நெருப்பைப் போன்று ஆகி விட்டனர். இந்த நாட்களில் எனக்கு எதிராக டாக்டர் மார்ட்டின் கிளார்க் என்ற பெயரை உடைய ஒரு பாதிரியார், நான் கொலை முயற்சியில் ஈடுபட்டதாக என் மீது வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் பஞ்சாபிலுள்ள மவ்லவிகள் எனது இரத்தத்தின் தாகத்தை உடையவர்களாக இருக்கின்றனர். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எதிரியாக இருக்கின்ற அன்னாரை ஏசிப் பேசுகின்ற ஒரு கிறித்தவரை விட என்னை அவர்கள் மோசமானவனாகக் கருதுகின்றனர் என்ற அனுபவம் எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால், இந்த வழக்கில் சில மவ்லவிகள் எனக்கு எதிராக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி கூறியுள்ளனர். மேலும் சிலர், பாதிரிமார்கள் வெற்றி பெற வேண்டும் என்று துஆ செய்து வந்தனர். நான் நம்பத்தகுந்த வழிகளின் மூலம் இவ்வாறு கேள்விப்பட்டேன். அதாவது, அவர்கள் பள்ளிவாயில்களில் அழுதழுது, இறைவா! இந்த பாதிரிக்கு உதவி செய்வாயாக. அவருக்கு வெற்றியை வழங்குவாயாக என்று துஆக்கள் செய்தனர். ஆனால், எல்லாவற்றையும் நன்கறிந்த இறைவன் அவர்கள் கூறிய ஒரு விஷயத்தைக் கூட கேட்கவில்லை. சாட்சி கூறியவர்களும் தங்களது சாட்சியின் மூலம் வெற்றி பெறவில்லை. அவ்வாறே துஆ செய்தவர்களின் துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவர்களே மார்க்கத்தைப் பாதுகாக்கின்ற ஆலிம்களாக இருக்கின்றனர். சமுதாயம், சமுதாயம் என்று மக்கள் அழைக்கின்ற அந்த சமுதாயம்தான் இது. இம்மக்கள் என்னை தூக்கிலிடுவதற்கு தங்களது எல்லா சூழ்ச்சிகளின் மூலமும் வலுவாக செயல்பட்டனர். இறைவன் மற்றும் அவனது தூதரின் எதிரியாக இருந்த ஒருவனுக்கு அவர்கள் உதவி செய்தனர். இந்த இடத்தில் மக்களிடம் இயல்பாகவே சமுதாயத்திலுள்ள எல்லா மவ்லவிகளும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் எனது உயிரின் எதிரிகளாக ஆகி விட்ட நிலையில் என்னை இந்த கொழுந்து விட்டெரியும் நெருப்பிலிருந்து காப்பாற்றியது யார்? என்ற கேள்வி எழலாம். ஏனென்றால், என்னை குற்றவாளியாக ஆக்குவதற்கு எட்டு அல்லது ஒன்பது பேர் எனக்கு எதிராக சாட்சி கூறியிருந்தனர். இதற்கான பதில் இதுவாகும்: உமது சமுதாயம் உம்மைக் காப்பாற்றாது. நீ அழிந்து விட வேண்டும் என்பதற்காக அவர்கள் முயற்சி செய்வார்கள். ஆனால், நான் உன்னைக் காப்பாற்றுவேன் என்று இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் எந்த இறைவன் எனக்கு வாக்குறுதி தந்திருந்தானோ அவனே என்னைக் காப்பாற்றினான். இதைப் பற்றி அவன் முன்னரே கூறியிருந்தான். இன்றிலிருந்து இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் அவன் கூறியது பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிடப்பட்டிருக் -கின்றது. அவன் கூறியது இதுதான்: فَبَرَّأَهُ اللّٰهُ مِمَّا قَالُوْا وَكَانَ عِنْدَ اللّٰهِ وَجِيْهًا இறைவன் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவித்து விட்டான். அவர் இறைவனின் பார்வையில் மேன்மைக்குரியவராக விளங்கினார்.

*(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 240-243)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad